ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

02.12.2009 - மலர் 06, இதழ் 39




தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஐரோப்பியரின் நோக்கம்

ஒல்லாந்தரின் ஆட்சி அதிகார வலயம் குறித்தும் தென்னக்கோன் திசாபதி சென்றது குறித்தும் மன்னன் பெரிதும் கோபமடைந்திருந்தான். எனினும், அதனை அவன் வெளிக்காட்டவில்லை. பழிதீர்க்கத் தருணம் பார்த்திருந்தான்.

அதன்பின் யாராகிலும் ஒருவர் யுத்தத்தில் தனது திறமையை வெளிப்படுத்தினாலோ அல்லது சாதனை புரிந்தாலோ மன்னன் அதனை சந்தேகக் கண்கொண்டே பார்த்தான். இத்தகையோர் என்றோ ஒருநாள் ராஜத்துரோகியாகச் செயல்படலாம் என்றே அவன் சிந்தித்தான். இதனால், எந்தவொரு மக்கள் தலைவன் மீதும் சற்றேனும் சந்தேகம் ஏற்பட்டாலும் உடனே அவர்களைப் பிடித்து சித்திரவதைக்குள்ளாக்கி கொலை செய்தான்.

மன்னன் இரண்டாம் இராஜசிங்கனுக்கு அந்நியருடனான தொடர்புகள் குறித்தோ அல்லது கொடுக்கல் வாங்கல்கள் குறித்தோ தீர்க்கமானதொரு திட்டம் இருக்கவில்லை. நேரத்திற்கு நேரம் மாறும் போக்கே அவனிடம் காணப்பட்டது.

அன்று உலகிலேயே மிகச்சிறந்த கறுவா இலங்கையில்தான் இருந்தது. கறுவா வர்த்தகத்தில் ஏகபோக உரிமை போர்த்துக்கேயரிடம் இருந்ததால் அவர்கள் பெருஞ்செல்வம் தேடினர்.

ஒல்லாந்தரும் அதற்காகவே இலங்கைக்கு வந்தனர். இந்த கறுவா வர்த்தகத்தைத் தேடி மேலும் ஐரோப்பியர்கள் இலங்கைக்கு வர ஆரம்பித்தனர். அவர்களில் டெனிஷ்காரர் (டென்மார்க் இனத்தினர்) பிரான்ஸியர், ஆங்கிலேயர் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் இந்தக் கறுவா வர்த்தகத்தில் பங்குதாரர்களாக இருப்பதற்கு காத்திருந்தனர்.

இரண்டாம் இராஜசிங்கன் போர்த்துக்கேயருக்கெதிராக நடவடிக்கை மேற்கொண்டதில் வெற்றி பெற்றமையால் அவர் புகழ் ஐரோப்பா வரை பரவியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உ/தரப் பரீட்சையில் 4 பிரிவுகளிலும் 12 பேருக்கு அதிகூடிய புள்ளிகள்

விஜய
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

இவ்வாண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் கலை, வணிகம், உயிரியல் விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய நான்கு பிரிவுகளிலிருந்தும் 12 மாணவர்கள் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.



எஸ்.மைதிலி நிபுண ரந்துனு பசிந்து நாமல் பசன் மலிந்த

இவர்களில் கொழும்பு ஆனந்த வித்தியாலயத்தைச் சேர்ந்த நிபுண ரந்துனு, கணிதப் பிரிவில் முதலிடத்தையும் நாடளாவிய ரீதியில் முதலிடத்தையும் பெற்றுள்ளார். இவர் பெற்றுக் கொண்டுள்ள Z-score புள்ளிகள் 3.3439 ஆகும். அத்துடன், பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியைச் சேர்ந்த என்டன் க்ரைசஸ் ஜெனின்ராஜ் 3.2498 Z-score புள்ளிகளுடன் நாடளாவிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். கொழும்பு நாலந்தா கல்லூரியைச் சேர்ந்த பீனு அமரதுங்க 3.2037 Z-score புள்ளிகளுடன் நாடளாவிய ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் கொழும்பு-6, சைவ மங்கையர் கல்லூரியைச் சேர்ந்த மாணவியான எஸ்.மைதிலி முதலிடத்தைப் பெற்றுள்ளதோடு, அவரது Z-score புள்ளிகள் 2.9388 ஆகும். கலைப் பிரிவில் தோற்றி முதலிடத்தைப் பெற்றவராக மாத்தறை ராஹுல வித்தியாலய மாணவரான பசிந்து நாமல் திகழ்கின்றார். இவர் பெற்றுக் கொண்டுள்ள Z-score புள்ளிகள் 2.5705 ஆகும். வணிகப் பிரிவில் முதலிடத்தை காலி மஹிந்த வித்தியாலயத்தைச் சேர்ந்த பசன் மலிந்த பெற்றுள்ளதோடு, அவர் பெற்றுள்ள Z-score புள்ளிகள் 2.8354 ஆகும்.

இவ்வாண்டில் ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த உ/தரப் பரீட்சைக்குத் தோற்றிய சுமார் 199,000 மாணவர்களில் சுமார் 126,000 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்பினைப் பெற்றுள்ளனர் என பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். க.பொ.த உ/தரப் பெறுபேறுகள் கடந்த 26 ஆம் திகதி வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## H1N1 வைரஸ் தொற்று குறித்து பாடசாலைகளைத் தெளிவுபடுத்தும் தீவிர வேலைத்திட்டம்



Novel Influenza A (H1N1) வைரஸ் தொற்று நோயிலிருந்து தற்காத்துக் கொள்வது பற்றி சுகாதார வைத்திய அதிகாரிகளூடாக பாடசாலை மாணவர்கள்- ஆசிரியர்கள்- பணிக்குழுவினர் மற்றும் பெற்றோர்களை விழிப்புணர்வூட்டும் தீவிர வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மாணவர்கள் அல்லது ஆசிரியர்கள் உட்பட ஏனையவர்களில் எவருக்கேனும் சுவாசம் தொடர்பான கோளாறுகள் இருப்பின், உடனடியாக சுகாதார அமைச்சினூடாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 20 வைத்தியசாலைகளில் எதற்கேனும் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளும்படி கல்வி அமைச்சு பாடசாலை ஆசிரியர்களிடமும் பெற்றோர்களிடமும் கோரியுள்ளது.

அந்த வைத்தியசாலைகளாவன; அங்கொடை ஐ.டீ.எச் வைத்தியசாலை, பொரளை ரிஜ்வே தாதியர் சிறுவர் வைத்தியசாலை, தேசிய வைத்தியசாலை உட்பட களுபோவிலை, ராகமை,பேராதனை, கராபிடிய, இரத்தினபுரி, குருநாகல், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைகளும் ஸ்ரீ ஜயவர்தனபுர, பதுளை, அம்பாறை, அநுராதபுரம், மாத்தறை ஆகிய பெரிய ஆஸ்பத்திரிகளும் நுவரெலியா, கலாபத, பொலன்னறுவை மற்றும் வவுனியா ஆகிய பிரதான வைத்தியசாலைகளும் ஆகும்.

மேற்குறித்த நோய் தொற்றியிருப்பதாக சந்தேகிக்ககப்படுகிறவர்கள் தமது வீடுகளில் தங்கியிருந்து ஓய்வெடுக்குமாறும் சனநெரிசல் உள்ள இடங்களில் நடமாடுவதைத் தவிர்க்கும்படியும் கல்வி அமைச்சு அறிவுறுத்துகின்றது.

## இலவச பாடநூல்களை வழங்கும் வைபவம்

2010 ஆம் ஆண்டுக்கான பாடசாலை மாணவர்களுக்குரிய இலவச பாடநூல்களை உத்தியோகபூர்வமாக வழங்கும் வைபவம் இம்மாதம் 8 ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக பிரதிக் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலவச பாடநூல் விநியோக நிகழ்வுகளை நாட்டின் ஏனைய பாடசாலைகளில் நடாத்துவதற்கும் கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.



அத்துடன், பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்ற பாடநூல்கள் கவனமாகப் பேணப்பட வேண்டியதன் அவசியம் குறித்து மாணவர்களை அறிவூட்டவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



### க.பொ.த சா/தரப் பரீட்சை:

## மீளக்குடியமர்ந்துள்ள மாணவர்களின் நலன் கருதி 8 பரீட்சை நிலையங்கள்

வன்னியில் மீளக்குடியமர்ந்துள்ளவர்களில் இம்மாதம் 12 ஆம் திகதி நடைபெறவுள்ள க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள சுமார் 3,000 மாணவர்களின் நலன்கருதி, 8 பரீட்சை நிலையங்களை அமைக்க பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, தற்போது அங்கு செயல்படுகின்ற, செயற்பட இருக்கின்ற பாடசாலைகளிலேயே இந்தப் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. அதற்காக துணுக்காய், பூநகரி, மடு மற்றும் கிளிநொச்சி ஆகிய கல்வி வலயங்களில் ஒவ்வொரு கல்வி வலயத்திலும் இரண்டு பரீட்சை நிலையங்கள் வீதம் மொத்தம் எட்டுப் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கம்பளையை வனப்புமிக்கதாக்கும் அம்புலுவாவ சிகரம்

உலக நாடுகளில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையிலான அதிசய நிர்மாணங்கள் பல நிர்மாணிக்கப்பட்டு, அவற்றின் மூலம் அந்நியச் செலாவணியை அதிகரித்துக் கொள்வதில் அரசாங்கங்கள் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன. அந்த வகையில் உலக நாடுகளில் சாய்கோபுரம், தொங்கு பாலம், பிரமிட்டுக்கள், தாஜ்மஹால், சீனப் பெருஞ்சுவர் போன்றன பிரசித்திமானவை.

இலங்கையில் இயற்கையாகவே நீர்வீழ்ச்சிகள், சிகரங்கள் போன்றவை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் அமைந்துள்ளன. காசியப்ப மன்னன், இயற்கையாக இருந்த சீகிரியாக் குன்றுக்குப் புதுவடிவம் கொடுத்து, கண்களைக் கவரும் விதத்தில் நூற்றுக்கணக்கான ஓவியங்களை வரைந்தது, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நோக்கில் இல்லாவிட்டாலும்கூட, அது இன்று பாரிய சுற்றுலா மையமாகக் காணப்படுகின்றது. இதனைத் தரிசிக்கவென்றே உலகின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் வருகை தருகின்றனர்.

அண்மைக்காலத்தில் நம் நாட்டு அரசியல் பிரமுகர் ஒருவருக்கு ஓர் எண்ணம் உதித்தது. அதுவே, தரிசாகக் கிடந்த மலைப்பிரதேசமொன்றை, இலங்கையர் மாத்திரமன்றி உலக மக்கள் அனைவரும் வந்து ரசிப்பதற்காக மாற்றியமைக்கும் எண்ணம். பல வருடங்களுக்கு முன்னர் உதித்த அந்த எண்ணம் படிப்படியாக செயலுருவம் பெற்றது. இதுவே இன்று அம்புலுவாவ கோபுரமாக உருவாகியுள்ளது. அந்த எண்ணக்கருவை தன்னுள் உருவாக்கியவர் மலைநாட்டின் பிரபல அரசியல்வாதியான தி.மு.ஜயரத்ன அவர்களாவர். அவர் விவசாயக் காணி அபிவிருத்தி அமைச்சராக இருந்தவேளை, 1996 ஆம் ஆண்டு விசேட வர்த்தமானி (கெசட்) மூலம் இப்பிரதேசம் அரச வனப்பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் உலக யுத்தத்தில் உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக ஒஸாக்காவில் அமைக்கப்பட்டிருக்கும் புற்றொன்றை ஒத்ததான கோபுரம் ஒன்று ஜப்பானில் உள்ளது. அந்த அமைப்பில் இல்லாவிட்டாலும் அதனை ஒத்ததாகவே நமது அம்புலுவாவக் கோபுரம் அமைந்திருக்கின்றது. வித்தியாசம் என்னவென்றால், ஜப்பானியக் கோபுரம் வெறும் தரைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருப்பதும் நமது அம்புலுவாவக் கோபுரம் மலை உச்சியில் அமைக்கப்பட்டிருப்பதுமேயாகும். அதனாலேயே நமது அம்புலுவாவக் கோபுரம், ஜப்பானியக் கோபுர்த்தை விடவும் அதிரம்மியத்தைத் தருகின்றது.

ஏறக்குறைய 927 ஏக்கர் கொண்டது அம்புலுவாவ மலைப்பிரதேசம். இப்பிரதேசத்தின் முதற்பகுதி மூலிகைத் தோட்டமாக அபிவிருத்தி செய்யப்பட்டு, பன்னூறு வகை மூலிகைகள் நடப்பட்டுள்ளன. மத்திய பகுதியில் நவீன வசதிகள் கொண்ட மாநாட்டு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. மலையுச்சியில் காட்சி பீடங்கள்,கோபுரம், பௌத்த ஆலயம், பள்ளிவாசல், கோயில் மற்றும் நிலத்திற்கடியில் [illegible] செல்லும் குகைப் பகுதி என்பன அமைக்கப்பட்டுள்ளன. அதனை அடுத்த தரைப்பகுதியில் பாரிய நீர்த்தடாகம் அமைக்கப்பட்டுள்ளது. கம்பளையை ஆட்சி செய்த 3 ஆவது விக்ரமபாகுவின் அரசி உபயோகித்த நீரூற்று அம்புலுவாவப் பிரதேசத்தில் அமைந்திருந்ததாகவும் அதுவே, 'ரன்கெட்டிய பொகுன" என்றழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. அந்த நீரூற்றே இன்று புதுவடிவில் சிறு குளமாக அமைக்கப்பட்டு, அதனைச் சுற்றி இயற்கையை மக்கள் ரசிக்கும் வகையில் பல்வகை மலர்ச்செடிகளும் மூலிகை மரங்களும் நடப்பட்டுள்ளன. அதனோடு இணைந்த தனியான வேறொரு பகுதியில் பாரிய கற்களை வடிவமைத்தும் அடுக்கியும் கற்கள் வனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதோடு, பார்வையிட வருகின்ற சிறார்கள் மகிழ்ச்சியோடு விளையாடிக் களிப்பதற்காக் சிறுவர் பூங்கா ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

அம்பு என்றால் நீர், ஒலு என்றால் ஊற்று என்பது பொருள். இதன்படி, அம்புலுவாவ என்பதை தமிழில் மொழிபெயர்த்தால் 'நீரூற்றுப் பிரதேசம்' எனக் கொள்ளலாம். கங்கசிரிபுர என்ற பெயரில் கி.பி 1341 இல் உருவான கம்பளை ராசதானி 1408 வரை வியாபித்தது. 5 ஆம் புவனேகபாகு மன்னர் 1341 முதல் 1357 வரை இங்கிருந்தே ஆட்சி புரிந்துள்ளார். அவரது ராசதானி இப்பிரதேசத்திலேயே அமைந்திருந்ததென கூறப்பட்டபோதிலும், இதுவரை அதற்கான தொல்பொருட்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. கம்பளைப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டு, கண்டி நூதனசாலை நுழைவாயிலில் வைக்கப்பட்டுள்ள இரட்டைச் சிங்க உருவங்கள் இந்த யுகத்தைச் சேர்ந்ததாகவே கருதப்படுகின்றது.

கடல் மட்டத்திலிருந்து 3565 அடி உயரத்தில் கம்பளை நகரம் அமைந்துள்ளது. கம்பளை நகர மட்டத்திலிருந்து அம்புலுவாவ மலைச்சிகரம் 1965 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இக்கோபுரத்தில் சுற்றியபடி ஏறிக்கொண்டிருந்தால் பிரதேசத்தின் வனப்புமிக்க நாலாபக்கங்களையும் பார்க்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. கோபுரத்தின் அடித்தளம் அகன்ற நிலப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டு, போகப்போக கோபுரத்தின் அகலம் சிறிது சிறிதாக குறைந்து கொண்டே சென்று, சிகரத்தின் உச்சியை அடைகின்றபோது, ஒருவர் மாத்திரமே அதுவும் மிகவும் சிரமப்பட்டு செல்லக்கூடிய முறையில் ஒடுங்கிய பகுதியாக அமைக்கப்பட்டுள்ளது. கோபுரத்தின் கீழ்ப்பகுதியிலிருந்து ஏறிக்கொண்டே சென்றால், படிப்படியாக தூய குளிர்காற்று அதிகரித்துக் கொண்டே சென்று, கோபுரத்தின் உச்சியை அடைகின்றவருக்கு, கைப்பிடியைப் பிடிக்காமல் நிற்கமுடியாத அளவுக்கு பலத்த குளிர்காற்று வீசுகின்றது. கோபுரத்தில் மேல்நோக்கி ஏறத் தொடங்கிய பலர் இடையில் நின்று விடுவதும் தைரியம் மிக்க மிகச்சிலரே உச்சிவரை செல்வதும் இங்கு அன்றாடம் காணக்கூடியதொரு காட்சியாகும். பெண்கள், பிள்ளைகள்கூட தைரியத்தை வரவழைத்துக்கொண்டு உச்சிவரை ஏறும் காட்சியை கீழ்ப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள காட்சிகாண் பீடத்திலிருந்து ரசிக்கலாம். தாய்ச்சிகரமான இதன் உச்சிவரை ஏறமுடியாதவர்களுக்காக காட்சிகாண் பீட அமைப்பில் இன்னொரு கோபுரம் சிறிது உயரம் குறைந்தளவில் இதற்குப் பக்கத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மதஸ்தலங்களை மேலும் ஒரு படி மக்களின் பிரயோசனத்திற்கு அமைவாகச் செய்வதாயின்,இம்மதஸ்தலங்களில் அந்தந்த மதங்கள் பற்றிக் கூறும் நூல்களையும் சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் திரட்டி வைக்கலாம். இதன் மூலம் இங்கு தரிசனத்திற்காக வந்து ஓய்வெடுப்பவர்கள் அவற்றைப்படித்துத் தமது மத அறிவைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்பும் ஏற்படலாம்.







-ஐ.ஏ.ஸத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரனுக்கு மனிதனை சுமந்து செல்லத் தயாராகும் 'ஏரீஸ்'



30 வருடங்களாக அமைதியாக இருந்த அமெரிக்கா, மீண்டும் ஒருமுறை சந்திரனுக்கு மனிதனை அனுப்ப முயற்சிக்கின்றது. அதற்காக 'ஏரீஸ் 1 எக்ஸ்' எனப் பெயரிடப்பட்டுள்ள ரொக்கெட்டைப் பயன்படுத்த எண்ணியுள்ளது. புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள அந்த ரொக்கெட்டை அண்மையில் பரீட்சித்துப் பார்த்த நாஸா, அந்த முயற்சி வெற்றிகரமாக நிறைவேறியதாக செய்திகளை வெளியிட்டுள்ளது.




## விண்வெளி ஆய்விற்காக 'ஏரீஸ்' ஆயத்தம்

மேலோட்டமாகப் பார்த்தால் 'ஏரீஸ் 1 எக்ஸ்' ரொக்கெட்டானது ஒரு ராட்சத வெள்ளை நிறப் பென்சிலைப் போன்று தோற்றமளிக்கின்றது. அதன் நீளம் 327 அடிகளாகும். சீரற்ற காலநிலை காரணமாக அதன் பரீட்சார்த்த விண் பயணம் சில தினங்கள் பிற்போடப் பட்டது. பின்னர் கடந்த ஒக்டோபர் 29 ஆம் திகதி வெற்றிகரமாக விண்வெளிக்கு ஏவப்பட்டது.

ஓய்வு பெறுவதற்குத் தயார் நிலையில் இருக்கும் அமெரிக்க விண்வெளி ஓடத்திற்குப் பதிலாக இந்த 'ஏரீஸ்' ரொக்கெட்டைத்தான் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளனர். பரீட்சார்த்த பயணத்தின்போது அதில் எந்தவொரு விண்வெளி வீரரோ அல்லது உபகரணங்களோ அனுப்பப்படவில்லை. ஏரீஸ் கட்டமைப்பில் பொருத்தப்பட்டுள்ள தொடர்புசாதனங்களில் இருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையிலேயே பரீட்சார்த்த நடவடிக்கை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.இப்பரிசோதனை முயற்சிக்கு 445 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவானதாக நாஸா அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கிரேக்க நாட்டு பூர்வீக கதைகளின்படி 'ஏரீஸ்' என்பது யுத்தத்தின் அதிபதியான கடவுளைக் குறிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## விண்வெளி ஆய்விற்குப் பொறுப்பான 'கொன்ஸ்டலேஷன்'

''பரீட்சார்த்த முயற்சி வெற்றிகரமாக முடிந்தது. ரொக்கெட்டின் பிரதான பெரகூட்களில் கோளாறுகள் ஏற்பட்டன. எனினும், அது பெரிய பிரச்சினையாக இருக்கவில்லை. இது நாம் பெற்ற பெரும் வெற்றியாகும். இதன்மூலம் எதிர்கால விண்வெளி ஆய்விற்கும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்குமான கதவு திறக்கப்பட்டுள்ளது'' என நாஸாவின் 'கொன்ஸ்டலேஷன்' எனும் விண்வெளி ஆய்வு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஜெஃப் ஹென்லி என்பவர் குறிப்பிட்டுள்ளார். ஏரீஸ் ரொக்கெட்டின் சிறப்புத்தன்மைகளையும் அதன் சாதனைகளையும் 'கொன்ஸ்டலேஷன்' நடவடிக்கைகளின் மூலமாகவே அறியக்கூடியதாக இருக்கின்றது.

## சந்திரனுக்குச் செல்ல உதவிய 'செடர்ன் 5'

இதன்படி, ஃப்ளோரிடாவில் உள்ள 'கென்னடி' விண்வெளி மத்திய நிலையத்தில் இருந்து 30 வருடங்களுக்குப் பின்னர், முதன்முதலாக ரொக்கெட் ஒன்று இப்பொழுதுதான் செலுத்தப்பட்டுள்ளது. தவிர, விண்வெளி ஓட செயற்றிட்டத்தின்கீழ் கொலம்பியா விண்ணோடம் அதன் கன்னிப் பயணத்தை 1981 ஆம் ஆண்டில் ஆரம்பித்தது.

ஆனால், 'செடர்ன்' வகை ரொக்கெட் ஒன்று இறுதியாக 48 வருடங்களுக்கு முன்பே விண்வெளிக்குச் செலுத்தப்பட்டது என நாஸா அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அந்தவகையில், 'அப்பலோ' செயற்றிட்டத்தின்கீழ் சந்திரனுக்கு விண்வெளி வீரர்களைச் சுமந்து சென்றதும் 'செடர்ன்' ரக ரொக்கெட்தான். இதுவரை காலம் தயாரிக்கப்பட்ட இந்த ரக ரொக்கெட்டுக்களில் 'செடர்ன்-5' எனும் இந்த ரொக்கெட்தான் மிக நீளமானதாகும்.இதன் நீளம் 363 அடியாகும்.


## பரீட்சார்த்த நடவடிக்கை

தற்போது பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்கு உட்பட்டுள்ள 'ஏரீஸ்' ரொக்கெட்டானது கடந்த மூன்று வருடங்களாக உருவாக்கப்பட்டதாகும். அமெரிக்க விண்வெளி வீரர்களை சந்திரனுக்கு அழைத்துச் செல்வதே அதன் பிரதான நோக்கமாகும். 2015 ஆம் ஆண்டளவில் 'ஏரீஸ்' ரொக்கெட் வாயிலாக சர்வதேச விண்வெளி மத்திய நிலையத்திற்கு விண்வெளி வீரர்களை அழைத்துச் செல்ல முடியும் என நாஸா தெரிவிக்கின்றது.

எனினும், ஆரம்ப ஏற்பாட்டில் சில பிரச்சினைகள் தோன்றியிருப்பதாலும் அமெரிக்கா உலக பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்திருப்பதாலும் இந்த முயற்சி 2017 ஆம் ஆண்டு வரை பிற்போடப்படலாம் என ஒபாமா நிர்வாகம் தெரிவிக்கின்றது. ஒபாமா நிர்வாகம் எத்தகைய தீர்மானத்தை எடுத்தாலும், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஏரீஸ் ரொக்கெட்டின் பரீட்சார்த்த நடவடிக்கைகளுடாகக் கிடைத்த சிறந்த பெறுபேறானது எதிர்கால விண்வெளி வேலைத்திட்டங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என நாஸா அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

-இரஞ்சித் ஜெயகர்






ஏரீஸ், விண்வெளி நோக்கிச் செல்லும் காட்சி






ஏரீஸ் ரொக்கெட்டின் நிர்மாணப் பணிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை உள்ளூராட்சி மன்ற

**மன்னர்களின் ஆட்சிக் காலத்திலிருந்தே வந்த உள்ளூராட்சி சபை முறை போர்த்துக்கேய, ஒல்லாந்தர் காலங்களில் மாற்றங்கள் பெற்றபின்னர் ஆங்கிலேயர் ஆட்சி காலத்திலேயே அது புது வடிவம் பெற்றிருந்தது. 1865 நொவெம்பர் 22 ஆம் திகதி கொழும்பு நகர சபை அமைக்கப்பட்டு 1866 ஜனவரி 12 ஆம் திகதி அதற்கான அங்கத்தவர் தேர்தல் நடைபெற்றது. பிரபுக்களே இதில் போட்டியிட்டார்கள். அவர்களுக்கு மட்டுமே வாக்குரிமையும் இருந்தது. ஏனெனில், அக்காலத்தில் சர்வஜன வாக்குரிமை இருக்கவில்லை. 1866 மார்ச் 20 ஆம் திகதி உருவாக்கப்பட்ட கண்டி நகரசபை 1866 டிசம்பர் 20 ஆம் திகதி உருவாக்கப்பட்ட காலி நகர சபை விடயத்திலும் இதே நிலைதான் காணப்பட்டது**



## நாடு முழுவதும் பரவலாக்கல்

1871 ஆம் ஆண்டு 26 ஆம் இலக்க கட்டளைச் சட்டப்படியே 'கம்சபா' எனும் கிராமிய நிர்வாக சபைகள் உருவாக்கப்பட்டன. எனினும், அவற்றின் தலைவர்களாக பட்டம், பதவியுள்ள அதிகாரம் மிக்க அரச நிர்வாகிகளான முதலி, முஹாந்திரம், முதியன்சல, திசாவ ஆகியோரே தெரிவு செய்யப்பட்டனர். இந்நிலை 1924 வரை நீடித்தது. 1924 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி





நாடு முழுவதும் கிராமசபைகள் உருவாக்கப்பட்டு பிரபுக்கள் தவிர்ந்தவர்களும் தலைவர்களாகத் தெரிவானார்கள். இதனால், இரு சாராருக்குமிடையில் சச்சரவுகளும் ஏற்பட்டன. இதனால், முதலி, முஹாந்திரம், முதியன்சல, திசாவ ஆகியோரின் எதிர்ப்பைச் சமாளிக்க புதிய தலைவர்கள் 1925 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் கூடி அகில இலங்கை கிராம சபைகள் சம்மேளனம் (சமஸ்த லங்கா கம்சபா சம்மேலனய) எனும் இயக்கத்தை உருவாக்கிக் கொண்டனர்.

## மேலும் சீர்திருத்தம்

1929 இல் அதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க 1930 இல் சில உறுப்பினர்களை அழைத்துக்கொண்டு ஆளுநரைச் சந்தித்து சீர்திருத்தம் கோரியதன் காரணமாகவே 1931 இல் 'டொனமூர் கமிஷன்' மூலம் கிடைத்த அரச நிர்ணய சபையால் உள்ளூராட்சி நிர்வாகத்துக்கான களுத்துறைப் பிரதிநிதி சி.படுவன்துடாவ அமைச்சரானார்.

அக்காலத்தில் ஒவ்வொரு அமைச்சும் தனித்தனி செயற்குழுவாகவே அமைந்திருந்தன. அதாவது, மக்கள் பிரதிநிதிகள் குழுக்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு அமைச்சருடனும் இணைத்து விடப்பட்டிருந்தார்கள். அதன்படி, வியாங்கொடைத் தொகுதியில் போட்டியின்றி வெற்றி பெற்றிருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க உள்ளூராட்சி மன்றங்களுக்குச் செய்த சேவை காரணமாக சி. படுவன்துடாவயின் அமைச்சுக் குழுவில் இடம்பெற்றிருந்தார். 1936 இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க உள்ளூராட்சி அமைச்சரானார். அப்போது அவர் அகில இலங்கை கிராம சபைகள் சம்மேளனத்தின் தலைவராகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அவர் கொழும்பு நகர சபை அங்கத்தவராகவும் குறிப்பிட்ட காலம் சேவை புரிந்துள்ளார். எனவே, அவர் தான் பெற்றிருந்த அனுபவத்தைக் கொண்டு 1938 இல் 60 ஆம் இலக்க சட்டமூலத்தில் புதிய சட்டங்கள் 61 இணைக்கப்பட்டிருந்தன. புறம்போக்கு நிலங்களை சுவீகரித்தல், வரி அறவிடல், வர்த்தகச் சந்தைகள் நிர்வகிப்பு, நீர் வழங்கல், பாதைகள் பரிபாலிப்பு, சுகாதாரம் பேணுதல்,





பொதுச்சேவை புரிதல் யாவும் இதில் காணப்பட்டதோடு, கணக்கு ஆய்வுக்கு ஜெனரல் ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்தார்.

## மேலும் பல மாற்றங்கள்

1945 இல் இயற்றப்பட்ட 13 ஆம் இலக்க சட்டமூலத்தின்படி ஊழியர்களின் பாதுகாப்பு பொருளாதார முன்னேற்றம் வழங்கப்பட்டதோடு, 1946 இல் இயற்றப்பட்ட 53 ஆம் இலக்க சட்டமூலத்தின்படி வாக்காளர் டாப்பு தயாரித்தலும் அமுலாக்கப்பட்டது. 1947 இல் பழைய ஊழியக் கண்டிப்பு முறைக்குக் காரணமான உடல் வரியும் உள்ளூராட்சி முறையினாலேயே ரத்துச் செய்யப்பட்டது. அதற்கு முன் வாக்குரிமை பெற்றிருந்த அனைவருமே கண்டிப்பாகத் தமது பிரதேசத்திலுள்ள கம்சபாவுக்கு உடல்வரி கட்டிக்கொண்டிருந்தார்கள்.

உடல்வரி செலுத்த முடியாதோர் வீதிப் புனரமைப்புப் பணிகளில் கூலியின்றி வேலை செய்யவேண்டும். இத்தகையோர்தான் நெடும் பாதைகள் அமைக்கவும் தண்டவாளங்கள் போடவும் பயன்படுத்தப்பட்டிருந்தனர். எனினும், பலர் உடல்வரியே செலுத்தினர். 1936 இல் பத்தேகம கம்சபாவுக்கு உடல்வரியாக் 4197.00 ரூபா கிடைத்திருந்தது. தற்போது இத்தொகையின் மதிப்பு 10,00,000.00 ரூபாவாகும். 1948 இல் சுதந்திரம் கிடைத்த சமயத்தில்எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க சுகாதார அமைச்சோடு உள்ளூராட்சி அமைச்சையும் ஏற்றிருந்தார்.

## மாவட்ட அபிவிருத்தி சபையும் பிரதேச சபையும்

1970 முதல் பழைய கிராம சபைத்தலைவர் முறை கைவிடப்பட்டு விசேட கமிஷனர்களிடம் நிர்வாகங்கள் கையளிக்கப்பட்டன. எனினும், 1980 இல் இயற்றப்பட்ட 35 ஆம் இலக்க சட்ட மூலத்தின்படி அதாவது, மாவட்ட அபிவிருத்திச் சபை எனும் அமைப்பின்படி அனைத்துக் கிராம சபைகளும் அதன் உபகாரியாலயங்களும் இணைக்கப்பட்டன. எனினும், 1987 இல் 15 ஆம் இலக்கச் சட்ட மூலமான பிரதேச சபை முறை இயற்றப்பட்டதும் முன்பிருந்த கிராம சபைகள் 1988 ஜனவரி 1 ஆம் திகதி முதல் இணைக்கப்பட்டு பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன.

## நிர்வாகத் தலைமைக்கான அடிபிடி

தலைவரைத் தெரிவு செய்வதற்காக அங்கத்தவர் மத்தியில் அதிக விருப்பு வாக்கு பெறும் முறை அன்றோடு கைவிடப்பட்டு கட்சிக்கு அதிக வாக்குகள் பெற்றுத்தருவதோடு அதிக விருப்பு வாக்குகளையும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ங்களின் தோற்றம்

பெறுபவரே தலைவர் என்ற முறை உருவாகியது. முன்பு கம்சபாக்கள் எனும் கிராம சபைகள் இருந்த காலத்தில் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர் 'மெம்பர் மஹத்தயா' என்றே அழைக்கப்பட்டார். கிராமத்தில் அவருக்குப் பெரிய மதிப்பு இருந்தது. ஒரு கிராம சபைக்கு அவர்கள் தெரிவு செய்யப்பட்ட பிறகு தலைவர் தெரிவுக்கு இரு வாரங்களோ, ஒரு மாதமோ செல்லும். அதற்குள் செல்வ வளம், அதிகார பலம் கல்வியறிவு யாவும் உள்ளோர் உரிய முறையிலோ, முறை தவறியோ லஞ்சம் கொடுத்தேனும் பலாத்காரமாகவும் தலைவராவதற்கு உறுப்பினர்களை தம் வசப்படுத்தி வைப்பதுண்டு. அப்போது அவர்களுக்கு உணவு, பானம், பாதுகாப்பு யாவும் வழங்குவர்.

## வரவு செலவு அறிக்கை

**அன்று ஒரு கிராம சபையின் வரவுசெலவு அறிக்கை பின்வருமாறு அமைந்திருக்கும். (சில மாறுபடலாம்) 1936 ஆம் ஆண்டு டிசம்பர் 13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 1937 ஆம் வருடத்தின் வரவு செலவு.**

| வரவு | ரூபாய் | சதம் |
|---|---|---|
| தண்டப் பணம் | 300 | 00 |
| சந்தை வரி | 60 | 00 |
| உடல் வரி | 4197 | 00 |
| சென்ற ஆண்டு அரசு வழங்கிய தொகை | 750 | 00 |
| சென்ற ஆண்டில் மிகுதியான தொகை | 181 | 12 |
| | 5488 | 12 |

| வரவு | ரூபாய் | சதம் |
|---|---|---|
| உடல் வரி தரகு | 420 | 00 |
| மீள அளிக்கப்படவேண்டிய | | |
| தண்டப்பணம் | 25 | 00 |
| காகிதாதிகள் | 35 | 00 |
| எழுது கருவிகள் | 15 | 00 |
| வீதிப்பொறுப்பாளர் கூலி | 126 | 00 |
| ஆற்றுப் பொறுப்பாளர் கூலி | 54 | 00 |
| எழுதுவினைஞர் கூலி | 300 | 00 |
| சுகாதாரப் பாதுகாப்பு | | |
| கூலிக்காரரின் சம்பளம் | 120 | 00 |
| பாலம் அமைக்க | 50 | 00 |
| கொங்கிரீட் குழிகளுக்கு | 500 | 00 |
| அறிவிப்புப் பதாகைகளுக்கு | 30 | 00 |
| கல்விச் செயற்பாடுகளுக்கு | 50 | 00 |
| அவசர உதவிகளுக்கு | 100 | 00 |
| விவசாயம் பெருக | 100 | 00 |
| விசேட வேலைகளுக்கு | 1678 | 50 |
| புதுப்பாதைகள் அமைக்க | 27 | 50 |
| கிராமியத் தொழில்களுக்கு | 1743 | 12 |
| மிகுதி | 114 | 12 |
| | 5488 | 12 |

இப்படிக்கு கிராம சபைத்தலைவர்



## கிராம சபையின் விளம்பரம்

1937 இல் ஒரு கிராம சபை பத்திரிகையில் பின்வரும் இரு அறிவிப்புகளையும் விடுத்திருந்தது. அதன் செயற்பாட்டுக்கு இது எடுத்துக்காட்டாகும். இவற்றில் பகிரங்க நிலைப்பாடு காணப்படுகின்றது.

## அறிவித்தல்

***1937 இல் எமது கமிட்டி கொந்தராத்து வழங்கவுள்ள வேலைக்கு விண்ணப்பப்படிவம் ஏப்ரலில் ஏற்றுக்கொள்ளப்படும். இதுபற்றி மேலும் விபரமாக உரிய தினத்தைக் குறிப்பிட்டு கமிட்டி வெளியிடும் விசேட அறிவித்தல் மார்ச் மாதம் பிரசுரிக்கப்படும்.***

***1937 இல் உடல்வரி செலுத்த விரும்பாதோர் 14.2.1937 இல் காலை 9 மணியளவில் எமது அலுவலகத்துக்கு வரவும். மாணவர்கள் தமது பாடசாலை அதிபரின் அத்தாட்சிப் பத்திரத்தையும் கொண்டு வரவேண்டும்.***

**இப்படிக்கு**
**ஹென்றி அபேவிக்ரம**
***20.1.1937 பத்தேகம கம்சபா கமிட்டியின் தலைவர்***





## வரலாற்றை நினைவுபடுத்தும் சின்னம்

உள்ளூராட்சி மன்றங்களை வளப்படுத்த ஆங்கிலேயர் முதன்முதலாகக் கொழும்பில் 1865 இல் கட்டிய நகரசபை மண்டபம் தற்போதும் பிரதான வீதி ஐந்து லாம்புச் சந்தியில் காணப்படுகிறது. புதிய நகர மண்டபம் கொழும்பு கறுவாத் தோட்டத்தில் பிரமாண்டமாகக் கட்டப்பட்டபின் மாநகர சபையாகி தற்போது பழைய நகர சபை மண்டபம் வரலாற்றுச் சின்னமாக ஆக்கப்பட்டுக் காட்சிக்காக அமைக்கப்பட்டுள்ளது. இதிலொரு விசேடம் என்னவென்றால் ஆரம்ப கட்டட அமைப்பு மீண்டும் அப்படியே செப்பனிடப்பட்டிருப்பதாகும். புத்தக வெளியீடு, இசைநிகழ்ச்சி, கலாசார விழா, பொதுக்கூட்டம் ஆகியவைக்கென தற்போது அது வாடகைக்கு விடப்படுகின்றது.

**ஏ.ஜே.எம்.நிழாம்**

பெரும்பாலான சாதாரண நோய்களையும் சில ஆபத்தான நோய்களையும் சுத்தமும் போதுமான உணவுகளுமே தவிர்த்து விடுகின்றன. குடல், தோல், கண்கள், நுரையீரல்களில் ஏற்படும் பல வகையான தொற்று நோய்களைத் தீர்க்க அல்லது தடுக்க தூய்மையாக இருப்பது மிக அவசியமானதாகும். அத்துடன், சுகாதாரம், பொதுச் சுகாதாரம் ஆகிய இரண்டையும் கடைப்பிடிக்க வேண்டியதும் அவசியமாகும்.

### நோய்கள் பரவும் விதம் (மலத்திலிருந்து வாய்க்கு)

நீர் மற்றும் ஈக்கள் மூலம் மலத் தொடர்புகள் நம்மை அறியாமலேயே உடலின் உட்செல்ல நேரிடலாம். இதனால், நோய்கள் தொற்றவும், பரவவும் கூடும். குடற்தொற்று, வயிற்றுப்போக்கு, நோய் வகைகளில் அடங்குகின்றன.

### காற்று வழியே பரவும் நோய்கள்

நோயாளி இருமல் மற்றும் தும்மல் பிரச்சினைகளால் அவதிப்படும்போது, அவரது சுவாசப் பாதையில் உள்ள நோய்க்கிருமிகள் வெகு வேகமாக வெளியேற்றப்படுகின்றன. மற்றவர்கள் இதனைச் சுவாசிக்க நேரிடும்போது காற்றுடன் உட்செல்லும் இக்கிருமிகளால் இவர்களுக்கும் இந்நோய்கள் பரவுகின்றன.

### உப்புக் குறைபாடு

வெயில் காலங்களில் கடுமையாக உழைப்பவர்களுக்கும் சில சமயங்களில் கால், கை அல்லது வயிற்றுப் பகுதிகளில் வலியுடன் கூடிய பிடிப்புக்கள்



# சுகமான வாழ்வு நமது கையில்

சீதபேதி, கொலரா, நெருப்புக்காய்ச்சல் மற்றும் ஈரல் அழற்சி போன்றவை மலக் கிருமிகளால் ஏற்படுகின்றன.

### தொடர்பினால் ஏற்படும் தொற்று நோய்கள்

நோயாளியைத் தொடுவதன் மூலமாகவும் அவரது படுக்கை, போர்வை முதலியவற்றைப் பயன்படுத்துவதன் மூலமாகவும்



சில வகைத் தொற்று வியாதிகள் பரவுகின்றன. சொறி, சிரங்கு, படர்தாமரை, பேன் போன்ற சரும நோய்களும் மேகப்புண், மேக வெட்டை போன்ற பால்வினை நோய்களும் தொடர்பினால் பரவும் தொற்று

ஏற்படுகின்றன.உடலில் உள்ள உப்பின் அளவு குறைவடைவதே இது போன்ற பிரச்சினைகளுக்கு உரிய காரணமாகும். இதனைத் தவிர்ப்பதற்கு அதிகமாக நீர் அருந்தும் பழக்கத்தினை பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். பிடிப்பு ஏற்படுகின்ற சமயங்களில் ஒரு வீற்றர் கொதிக்க வைத்த நீரில் ஒரு தேக்கரண்டி உப்பைப் போட்டுக் குடிக்கலாம்.

கோடைகாலத்தில் அதிகம் வியர்வை சிந்தி வேலை செய்பவர்கள், உடல் வெளிறிப்போய் சோர்வடையலாம். சில சமயங்களில் மயக்கம் வருவது போலவும் இருக்கும். அது போன்ற சந்தர்ப்பங்களில் நாடி வேகமாகத் தளர்ந்து வருவதோடு, சருமம் வெப்பமான நிலையில் இருந்தாலும்கூட அது குளிர்ச்சியாகவும் ஈரத்துடனும் காணப்படும். இந்த வகை நோயாளிகளை குளிர்ச்சியான இடத்தில் படுக்க வைத்து பாதங்களை உயர்த்தி அவர்களது கால்களைத் தேய்த்துவிட வேண்டும். அவருக்கு குடிப்பதற்கு உப்புச் சேர்ந்த நீரைக் கொடுக்கவேண்டும். நோயாளி நினைவிழந்த நிலையில் இருப்பாரானால் அவருக்கு வாய் வழியாக பானங்களைக் கொடுத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2009, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



க/நீரெல்லை முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மொஹம்மட் ரஸ்கான், 175 புள்ளிகளுடன் கண்டி மாவட்டத்தில் ஏழாவது இடத்தைப் பெற்றுள்ளார். இவர், அக்குறனை-மேல்ச்சேனையைச் சேர்ந்த எம்.பாரிஸ்-சித்தி ஸாய்மா தம்பதியரின் புதல்வராவார்.



மன்/பொன்தீவுக்கண்டல் றோ.க.த.க.பாடசாலையில் கல்வி பயிலும் அய்கல் எனன்சி, 140 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



மட்/காகித நகர் மில்லத் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் ஃபாத்திமா அஸீரா, 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



பொலன்னறுவை முஸ்லிம் மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் எம்.சஹ்னாஸ் பேகம், 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.முஹாஜிரீன்-சம்சுன்னிசா தம்பதியரின் புதல்வியாவார்.



பொலன்னறுவை முஸ்லிம் மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் உஸாமா அஹமட், 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.றிஸ்வி-ஏ.றிஸானா தம்பதியரின் புதல்வராவார்.



தெஹியங்க அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரியிலிருந்து பத்து மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். (முதலாம் வரிசை-இடமிருந்து வலமாக) எஃப்.சிப்னா (175 புள்ளிகள்), எம்.இஸட்.சஹீமா (160 புள்ளிகள்), எஃப்.பர்ஹானா (151 புள்ளிகள்), நுஸ்கி அஹமட் (142 புள்ளிகள்), எம்.நுஸ்கி அஹமட் (154 புள்ளிகள்), ஆகிப் அஹமட் (148 புள்ளிகள்) ஆகியோரையும் (பின்வரிசை-இடமிருந்து வலமாக) எஸ்.ரசீசா (ஆசிரியை), எஃப்.சம்லா (142 புள்ளிகள்), எஃப்.அம்னா (157 புள்ளிகள்), பீ.எம்.ஹனீபா (அதிபர்), எம்.டில்ஷாத் (162 புள்ளிகள்), சாகிர் அஹமத் (175 புள்ளிகள்), எஃப்.ரொஸ்மின் (ஆசிரியை) ஆகியோரையும் படத்தில் காணலாம்.

மட்/உதயபுரம் தமிழ் வித்தியாலயத்தில் ஆறு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். அவர்கள் முறையே; ஞா.கிருஷ்ணயா (159 புள்ளிகள்), ச.அஜய் (158 புள்ளிகள்), உ.பிலோமினா (152 புள்ளிகள்), க.பூஜா (151 புள்ளிகள்), ஆ.டென்ஷிகா (150 புள்ளிகள்), ர.கிசோமி (140 புள்ளிகள்) என புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



கம்பஹா, உடுகொட அரபா மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ஃபாத்திமா ரிம்ஸியா, 148 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், முனாஸ்-ஹய்ருல் இனாயா தம்பதியரின் புதல்வியாவார்.



கொழும்பு, ஹமீட் அல்-ஹுசைனி கல்லூரியில் கல்வி கற்கும் எம்.ஆர்.அப்துல்லா, 143 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர்,எம்.ரமீஸ்-எஃப்.பாஸிலா தம்பதியரின் புதல்வராவார்.



பொலன்னறுவை முஸ்லிம் மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் நஸ்ரின் பானு, 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ராசிக் பரீட்-நபீரா தம்பதியரின் புதல்வியாவார்.

# சமிக்ஞை விளக்குகள் எவ்வாறு செயல்படுகின்றன?



நெடுஞ்சாலைகளில் இடைக்கிடையே சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டிருப்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். இவை அனைத்தும் தானியங்கி முறைக்கு ஏற்பவே வடிவமைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் பாதையைக் கடந்து செல்வதற்கும் வாகனங்கள் பல்வேறு திசைகளில் பயணிப்பதற்கும் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கும் இவை பெரும் துணைபுரிகின்றன.

போக்குவரத்து நெரிசல் அதிகம் நிலவக்கூடிய பாதைகள், நெரிசல் அற்ற பாதைகள் என்ற தன்மைகளுக்கு ஏற்ப, இந்த சமிக்ஞை விளக்குகள் இயங்குகின்றன. சிவப்பு, மஞ்சள் மற்றும் பச்சை நிறங்களிலான இந்த சமிக்ஞை விளக்குகள் எரிவதற்கான கால அவகாசமும் பாதைகளின் தன்மைக்கு ஏற்ப வேறுபடுகின்றது.

சமிக்ஞை விளக்குகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாட்டு அறையிலுள்ள கணினிகளில் இதற்கேற்ப திட்டநிரல்கள் (Programming) உள்ளீடு செய்யப்பட்டிருக்கின்றன. அதன்படி, இந்த விளக்குகள் 30 செக்கன்கள் அல்லது 60 செக்கன்கள் அல்லது அதற்கும் சற்று அதிக காலஅளவுகளில் நில் (சிவப்பு விளக்கு), கவனி (மஞ்சள் விளக்கு), செல் (பச்சை விளக்கு) போன்ற சமிக்ஞைகளைக் காட்டும். அதுவே, சில முக்கிய தேவைகள் ஏற்படும்பட்சத்தில் வழமையான திட்ட நிரல்களை தற்காலிகமாக நிறுத்தி, கட்டுப்பாட்டு அறையிலிருந்து நேரடியாக இயக்குவர்.

இதேவேளை, பாதைகளைக் கடக்கவேண்டிய தேவை ஏற்படின், சமிக்ஞை விளக்கிலுள்ள பொத்தான்களை அழுத்துவதனூடாக சிவப்பு விளக்கை எரியச் செய்து ஒலி பிறப்பாக்கத்துடன் பாதையைக் கடந்து செல்லக்கூடிய வசதிகளுடனான சமிக்ஞை விளக்குகளும் நெடுஞ்சாலைகளில் தற்போது பொருத்தப்பட்டுள்ளன. இலங்கையிலும் இவ்வாறான சமிக்ஞை விளக்குகளைக் காணலாம். தவிர, பார்வைப் புலன் அற்ற பாதசாரிகள் பாதையைக் கடந்து செல்வதற்கு வசதியாக ஒலிபெருக்கி அறிவிப்புடன்கூடிய சமிக்ஞை விளக்குகளும் ஒருசில மேலைநாடுகளில் தற்போது பயன்பாட்டில் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.



# மருந்தாகும் 'தேள் விஷம்'

'விஷம்' என்றால் அது உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியதாகவே இருக்கும். எனினும், இன்றைய நவீன மருத்துவ ஆராய்ச்சிகளின் வாயிலாக விஷங்களும் கொடிய நோய்களுக்கான மருந்துகளாக உபயோகிக்கப்படுகின்றன. அந்தவகையில், பாம்பு விஷத்திலிருந்து ஆபத்தான பல நோய்களுக்கு மருந்துகள் தயாரிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. இது போன்ற இன்னொரு ஆராய்ச்சியில் லண்டன் ஆராய்ச்சியாளர்கள் வெற்றி கண்டுள்ளனர். அதுதான், கொடிய கருந்தேள் விஷத்திலிருந்து மூளைப் புற்றுநோய்க்கான மருந்து தயாரிக்கப்பட்டுள்ளமை ஆகும்.



அந்த ஆய்வின்போது, தேள் விஷத்தை கதிர் வீச்சுக்கு உட்படுத்தும்போது அந்த விஷத்தன்மை மருத்துவ குணம் கொண்டதாக மாறுவது கண்டறியப்பட்டுள்ளது. குறித்த விஷத்தை கதிர் வீச்சுக்கு உட்படுத்துவதனால் அதிலுள்ள மூலப் பொருட்கள் சிதைவடைகின்றன. இதன்போது, அந்த விஷத்தில் அடங்கியுள்ள புரதம், புற்றுநோய்களை உருவாக்கக் கூடிய செல்களைத் தேடிச்சென்று அழிக்கின்ற மருத்துவத்தன்மையைக் கொண்டுள்ளது என்றும் தெரியவந்துள்ளது. அது மூளைப் பகுதியில் ஏற்படுகின்ற புற்றுநோய் மற்றும் மூளையில் ஏற்படக்கூடிய சதை வளர்ச்சி போன்றவற்றைக் குணப்படுத்தக்கூடிய ஆற்றலைக் கொண்டது என்றும் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இப்போது எனது காற்சட்டை நீல நிறம், முதலாவது மாத சீட்டிழுப்புக்காக கூப்பன்கள் கையளிக்கும் தினம் நிறைவு பெற்றுவிட்டது. எஞ்சிய பகுதிகளை சரியான முறையில் வர்ணந்தீட்டி விரைவாக அனுப்பி வைத்து நீங்களும் வெற்றியாளர்களாகுங்கள்.**

இன்றே நீங்களும் ஹோம்ரன் பஸ் Colour Me போட்டியில் பங்குபற்றி, ஹோம்ரன் பெஸ் பக்கட்டினுள் இருக்கும் ஹோம்ரன் சாம்பை வர்ணந்தீட்டி அனுப்பி வைத்து பெறுமதியான பரிசுகளை வெல்லுங்கள். நீங்கள் வர்ணந்தீட்டிய ஹோம்ரன் சாம்பின் நிறம், இலங்கங்களிடப்பட்ட எமது சாம்பின் பகுதிகளுடன் பொருந்தினால் ஹோம்ரன் பெஸ் மூலமாக கைநிறையப் பரிசுகள்.

Homerun PAS COLOUR ME COMPETITION

## இரண்டாம் மாத சீட்டிழுப்பு

சாம்பின் பகுதிகளில் குறைந்தபட்சம் மூன்றையாவது எமது சித்திரத்தை ஒத்ததாக வர்ணம் தீட்டி அனுப்பும் உங்களுக்கு, இரண்டாம் மாத சீட்டிழுப்பில் பங்குபற்றும் வாய்ப்புக் கிடைக்கும். **நொவெம்பர் 15ஆந் திகதி முதல் டிசெம்பர் 15ஆந் திகதி வரை** அனுப்பி வைக்கப்படும் கூப்பன்கள் இந்தச் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். அதில் **தெரிவுசெய்யப்படும் 04 வெற்றியாளர்களுக்கு பைசிக்கிள்களும்,** மேலும் **இருவருக்கு வரைதல் உபகரணங்களுடன் பெறுமதியான 400 ஆறுதல்** பரிசுகளும் கிடைக்கும்.

## மாபெரும் இறுதிப் போட்டி

சகல பிரிவுகளிலும் எமது சித்திரத்தை ஒத்ததாக வர்ணம் தீட்டி அனுப்பும் உங்களுக்கு, இறுதிச் சீட்டிழுப்பில் பங்குபற்றும் வாய்ப்பு கிடைக்கும். **ஒக்டோபர் 15ஆந் திகதி முதல் ஜனவரி 15ஆந் திகதி வரை** அனுப்பப்படும் சரியான சகல கூப்பன்களும் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும்.

மாபெரும் இறுதிச் சீட்டிழுப்பில் தெரிவுசெய்யப்படும் **முதலாவது வெற்றியாளர் குடும்பத்துடன் (தாய் மற்றும் தந்தை) மலேசியாவில் வோட்டர் வேர்ள்ட் சுற்றுலா** மேற்கொள்வார். மேலும் 10 வெற்றியாளர்களுக்கு **பைசிக்கிள்களும்** அத்துடன் **நான்கு பேருக்கு வரைதல் உபகரணங்களும்** இன்னும் **05 பேருக்கு MP3 பிளேயர்** மற்றும் **ஏனைய வெற்றியாளர்களுக்கு பெறுமதியான 400 ஆறுதல் பரிசுகளும்** வழங்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் - தொலைபேசி இலக்கங்கள் 011 3 198080, 011 2 925658 அல்லது 0772 398671.**

**ஹோம்ரன் பெஸ் Colour Me வர்ணந்தீட்டும் போட்டி**
**வரையறுக்கப்பட்ட கலர் புரடக்ட்ஸ், இல. 437/4 த.பெ.இல. 10, ராகம வீதி, கடவத்த**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பஹ்ரைன்





அரசர்


பிரதமர்

வாழ்க்கை மரம்







அல்-ஃபதாஹ் மசூதி

**அரசு:** நியமிக்கப்பட்ட குழுவினைக்கொண்ட முடியரசு.
**சுதந்திரம்:** 1602 இல் போர்த்துக்கலிடம் இருந்து; 1783 இல் பாரசீகத்திடம் இருந்து; 1971, டிசம்பர் 16 ஆம் திகதி பிரித்தானியாவிடம் இருந்து.
**தேசிய விடுமுறை தினம்:** தேசிய தினமான டிசம்பர் 16.
**அரசர்** (1999): ஹமாத் இப்னு இஸா அல்-கலீஃபா.
**பிரதமர்** (1970): கலீஃபா இப்னு சல்மான் அல்-கலீஃபா.

## புவியியல்

'பஹ்ரைன்' என்றால் 'இரு கடல்கள்' எனப் பொருள்படுகின்றது. இந்நாட்டை 'பாரசீக வளைகுடாவின் பவளம்' என்றும் வர்ணிப்பர். நாட்டின் பெரும்பாலான பகுதிகள் மணல் சமவெளிகளையும் குன்றுகளையும் கொண்டிருக்கின்றன.இங்கு குறிப்பிடக்கூடிய ஆறுகளோ, ஏரிகளோ எதுவும் கிடையாது.

ஒரு மத்திய கிழக்கு நாடாகிய பஹ்ரைன், பாரசீக வளைகுடாவில் சவூதி அரேபியாவின் கிழக்குக் கடற்கரையிலிருந்து 40 கி.மீற்றர் வரை பரவிக் கிடக்கின்றது. இந்த நாடானது ஒரு பெரிய தீவையும் 32 சிறு தீவுகளையும்கொண்ட ஒரு தீவுக் கூட்டமாகும்.

**மொத்தப் பரப்பு:** 257 ச.மைல் (665 ச.கி.மீற்றர்);
**நிலப்பரப்பு:** 236 ச.மைல் (619 ச.கி.மீ).
**தலைநகரமும் பெரிய நகரமும்:** அல்-மனாமா.
**உயர் மையம்:** ஜபல் அட்-டுகாம் (122 மீற்றர்).
**தாழ்ந்த மையம்:** பாரசீகக் குடா.
**நிலப்பிரிவுகள்:** 12 மாநகரப் பிரிவுகள்.
**சனத்தொகை** (2009): 727,785.**நாணயம்:** பஹ்ரைன் டினார்.
**இணையத்தளக் குறியீடு:** .bh
**சர்வதேச தொலைபேசிக் குறியீட்டு எண்:** 973
**மொழிகள்:** அரபு, ஆங்கிலம், ஃபார்ஸி, உருது.
**இனங்கள்:** பஹ்ரைனி 62.4%,பஹ்ரைனி அல்லாதோர் 37.6%.
**சமயம்:** இஸ்லாம் 81%, கிறிஸ்தவம் 9%.
**எழுத்தறிவு** (2003): 89%.
**தேசிய சின்னங்கள்:** மலர், மரம், விளையாட்டு, மிருகம், பறவை எதுவும் பிரகடனப்படுத்தப்படவில்லை.

## தேசிய கீதம்

Bahrainuna
Malikuna
Ramz al-wi'am
Dusturuha 'ali al-makanah wal-maqam…என ஆரம்பிக்கின்றது.

## வரலாறு

கி.மு மூன்றாம் நூற்றாண்டில் பஹ்ரைன் மிக முக்கிய வர்த்தகத் தளமாக இருந்தது. கி.பி 4 ஆம் நூற்றாண்டு வரை பாரசீகர்களால் ஆளப்பட்ட பஹ்ரைன், அதன்பின் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திற்கு உள்ளானது. மீண்டும் 1602 இல் பாரசீகர்களின் கீழ் வந்தது. 1820 இல் பிரித்தானியாவின் ஆளுகையின் கீழ் வந்தது. 1782 முதல் அஹமட் இப்னு அல்-கலீஃபா குடும்பமே நாட்டை ஆண்டு வருகிறது. 2001 ஆம் ஆண்டு பெப்ரவரியில் பஹ்ரைன் ஒரு அரசியல் சாசன முடியாட்சி நாடாக மன்னரால் பிரகடனப்படுத்தப்பட்டது. 2002, ஒக்டோபர் மாதம் தேசிய நாடாளுமன்றக் கீழ்சபைக்கான தேர்தல் நடைபெற்றது.

## கலாசாரம்

மத்திய கிழக்கின் நவீனத்துவம் அடைந்துவரும் அரேபியக் குடாநாடுகளில் பஹ்ரைனும் ஒன்றாகும். இஸ்லாம், இங்கு பிரதான மதமாக இருந்தாலும் கிறிஸ்தவ தேவாலயங்கள், இந்துக் கோவில்கள், சீக்கிய வழிபாட்டுத் தலங்கள், யூதர்களின் வழிபாட்டுத் தலங்கள் என்பனவும் காணப்படுகின்றன.

## காலநிலை

கோடைகாலத்தில் வெப்பமும் உலர் காலநிலையும் நிலவும். இக்காலகட்டத்தில் இங்கு மழை பொழிவதில்லை. மாரிகாலத்தில் சற்று இதமான காலநிலை நிலவும். ஓகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் மிக வெப்பமான காலநிலை நிலவும். ஏறக்குறைய 97⁰F அளவு வெப்பநிலை காணப்படும். குளிர்காலத்தில் இது 55⁰F அளவாகக் குறைவடையும்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2004): **பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்**-191,600; **செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்**-649,800. **வானொலி நிலையங்கள்** (1998): AM2, FM3.**தொலைக்காட்சி நிலையங்கள்:**4. **இணையத்தள வழங்குனர்கள்:** 1952. **இணையத்தளப் பாவனையாளர்கள்** (2005): 152,700.

## போக்குவரத்து

**பெருந்தெருக்களின் மொத்த நீளம்:** 3498 கி.மீற்றர்.
**துறைகளும் துறைமுகங்களும்:** மினா சல்மான், சிட்ரா.
**விமான நிலையங்கள்** (2005): 3.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கைக்குரிய நிலம்: 2.82%)**மற்றும் விலங்கு வேளாண்மை:** பழங்கள், மரக்கறி வகைகள், கோழிப்பண்ணை, பாற்பண்ணைப் பொருட்கள், மீன் வகைகள். **தொழிலாளர் தொகை** (1997): 380,000 (குறிப்பு: இதில் 44% ஆனவர்களில் 15 முதல் 64 வயது வரையிலானோர் அந்நாட்டின் பிரஜைகள் அல்லர். விவசாயம் 1%. கைத்தொழில் மற்றும் வர்த்தக சேவைகளில் 79% ஆனோர் ஈடுபடுகின்றனர். 20% ஆனோர் அரச ஊழியர்கள் ஆவர்) **வேலையற்றோர்:** 15%. **கைத்தொழில்கள்:** பெற்றோலிய உற்பத்தியும் சுத்திகரிப்பும், அலுமினியம் உருக்குதல், இரும்புருக்கு, பசளைகள், கப்பல் பழுதுபார்த்தல், உல்லாசப் பயணத்துறை. **இயற்கை வளங்கள்:** எண்ணெய், இயற்கை வாயு, மீன், முத்துக்கள்.**ஏற்றுமதிகள்** (2005): பெற்றோலியமும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களும், அலுமினியம், புடவைகள். **இறக்குமதிகள்** (2005): சுத்திகரிக்கப்படாத எண்ணெய், இயந்திரங்கள், ரசாயனப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): சவூதி அரேபியா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ்,ஜப்பான், ஜேர்மனி, ஐக்கிய ராச்சியம், பிரான்ஸ்.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

* **அல்-ஃபதாஹ் மசூதி** * **அல்-காமிஸ் மசூதி** * **அராட் கோட்டை** * **பப் அல்-பஹ்ரைன்** (பஹ்ரைனின் வாசல்) * **பஹ்ரைன் கோட்டை** * **பஹ்ரைன் தேசிய அருங்காட்சியகம்** * **பார்பர் கோயில்** * **முதலாவது எண்ணெய்க் கிணறு** * **சியாதி இல்லம்** * **வாழ்க்கை மரம்** (100 வருடங்களுக்குமேல் பழமை வாய்ந்த மரம்)



பஹ்ரைனின் வாசல்
மனாமா நகரின் ஒரு பகுதி
தேசிய அருங்காட்சியகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 4 மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்கான சுற்றாடல் மாதிரி வினாத்தாள்




★ *01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கான சரியான விடைகளின் கீழ்க் கோடிடுக.*

01. ஆவணி மாதத்தில் பூக்கும் தாவரம் எது?
(1) றப்பர் (2) இலுப்பை (3) ரம்புட்டான் (4) வேம்பு

02. ஔடத பானங்கள் தயாரிக்க பயன்படும் பூ எது?
(1) வில்வம் பூ (2) வைகாசிப் பூ (3) அலரிப் பூ (4) அந்தூரியம்

03. ஆறு இதழ்களைக்கொண்ட பூ எது?
(1) திருவாத்திப் பூ (2) பவளமல்லிகை (3) எக்சோரா (4) கடதாசிப்பூ

04. நறுமணத்தைக்கொண்ட பூ எது?
(1) குண்டு மல்லிகை (2) கடதாசிப் பூ
(3) முள்முருக்கு (4) செவ்வரத்தம் பூ

05. வீட்டுத்தோட்டத்தில் உள்ள பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பிராணி எது?
(1) தேனீ (2) செண்பகம் (3) நத்தை (4) தேன்குருவி

06. நாக்கை வெளியில் நீட்டி உணவைப் பெற்றுக்கொள்ளும் பிராணி எது?
(1) முயல் (2) தவளை (3) ஆடு (4) மாடு

07. மோப்பம் பிடிக்கும் தன்மை, கூர்மையான கேட்கும் திறன் உடைய பிராணி எது?
(1) புலி (2) குரங்கு (3) நாய் (4) யானை

08. கொள்ளை நோயைப் பரப்பும் பிராணி எது?
(1) நுளம்பு (2) எலி (3) பூனை (4) ஈ

09. நிலத்தின் மீது விழும் பல்வேறு கழிவுப் பொருட்களை சிறுசிறு துண்டுகளாக்கி உக்குவதற்கு உதவும் பிராணி எது?
(1) காகம் (2) கறையான் (3) அட்டை (4) அணில்

10. பாம்பு கடித்த ஒருவரைக் காப்பாற்றுவதற்கு உடனடியாகச் செய்ய வேண்டிய மிகப் பொருத்தமான செயல் எது?
(1) பாம்பைப் பிடித்து பாதுகாப்பாக வைத்திருத்தல்
(2) கடித்த இடத்திற்கு சிறிது மேலே ஒரு துணியினால் கட்டி விடுதல்.
(3) கடித்த இடத்தில் உகந்த மருந்தைப் பூசுதல்.
(4) பருகுவதற்கு உகந்த பானத்தைக் கொடுத்தல்.

11. வீடுகளில் தனிப்பட்ட ஒருவரால் பயன்படுத்தப்படும் பாவனைப் பொருள் எது?
(1) தொலைக்காட்சி (2) கைக்குட்டை (3) தொலைபேசி (4) மின்னழுத்தி

12. சரியான கொண்ணிலையில் நடக்கும் ஒருவரின் பாதணியின் எந்தப் பகுதி அதிகளவு தேய்ந்திருக்கும்?
(1) பாதணியின் முன்பகுதி
(2) பாதணியின் அடியின் பிற்பகுதி சமச்சீராக தேய்வடைதல்
(3) பாதணிகளின் அடி பக்கவாட்டில் தேய்வடைதல்
(4) பாதணி அடி ஒரு பக்கமாகத் தேய்வடைதல்


13. இலங்கை இந்தியாவுக்கு எத்திசையில் அமைந்துள்ளது?
(1) வடக்கு (2) மேற்கு (3) தெற்கு (4) கிழக்கு

14. அரச இலச்சினையில் உள்ள நிறைகுடம் வெளிப்படுத்துவது;
(1) தார்மீகம் (2) தன்னிறைவு
(3) சௌபாக்கியம் (4) உலக நிலைப்பாடு

15. 
மஞ்சள் நிறப் பின்னணியில் காணப்படும் இவ்வீதிச் சமிக்ஞை எதனைக் குறிப்பிடுகின்றது?
(1) முன்னால் பாதசாரிக் கடவை
(2) முன்னால் சிறுவர் கடக்கும் பாதை
(3) முன்னால் பாதுகாப்பான புகையிரதக் கடவை
(4) முன்னால் பாதுகாப்பில்லாத புகையிரதக் கடவை

16. மகாவலி கங்கை கடலுடன் சங்கமமாகும் இடம்;
(1) மாத்தளை (2) களுத்துறை
(3) கொட்டியாரக்குடா (4) கொழும்பு

17. உலர் மின்கலங்கள் இரண்டும் மின்குமிழ் ஒன்றும் வயர் துண்டுகள் மூன்றும் கீழே உள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ளவாறு தொடுக்கப்பட்டுள்ளன. ஒளிரும் மின்குமிழைக் கொண்ட உரு எது?



18. அணிந்திருக்கும் உடையில் தீப்பிடித்திருக்கும் ஒருவரைக் காப்பாற்றுவதற்கு உடனடியாக எடுக்கப்பட வேண்டிய மிகப் பொருத்தமான நடவடிக்கை;
(1) வைத்தியரிடம் கொண்டுசெல்லுதல்
(2) உடையின் தீப்பிடித்த பகுதியைக் கிழித்தெறிதல்
(3) நிலத்தில் உருளச் செய்தல்
(4) மெல்லிய துணியால் போர்த்துதல்

19. உடலை நோய்களிலிருந்து பாதுகாக்கும் உணவு எது?
(1) வல்லாரை (2) நெய் (3) சோறு (4) மீன்

20. உடலுக்குத் தேவையான சக்தியை வழங்கும் போசணைச் சத்து எது?
(1) கனியுப்புக்கள் (2) காபோவைதரேற்று
(3) நார்ப்பொருட்கள் (4) விற்றமின்கள்

21. போமலினில் இடப்பட்ட மீனை உண்பதால் ஏற்படும் பக்கவிளைவுக்கான நோய் அறிகுறி;
(1) வயிற்றுவலி உண்டாதல் (2) வாந்திபேதி ஏற்படல்
(3) உதடுகள் வீங்குதல் (4) சொறிவு ஏற்படல்

22. மிக விரைவாக ஆவியாகி இழக்கப்படும் திரவம் எது?
(1) தேங்காய் எண்ணெய் (2) ஸ்பிரிட் (3) நீர் (4) மரக்கறி எண்ணெய்


23. வீட்டுத்தோட்டத்திற்கு வேலி அமைப்பதற்கு மிகப் பொருத்தமான தடி எது?
(1) வேம்பு (2) கிளிசிறியா (3) நாவல் (4) இலுப்பை

24. மத்திய மாகாணத்தின் தலைநகரம் எது?
(1) திருகோணமலை (2) யாழ்ப்பாணம் (3) கண்டி (4) பதுளை

25. தேசப்படங்களில் நதிகளைக் காட்டுவதற்குப் பயன்படுத்தும் நியம நிறம் எது?
(1) கபிலம் (2) சிவப்பு (3) கறுப்பு (4) நீலம்

26. வானில் எவ்வகையான முகிற்கூட்டம் உள்ளபோது வானம் தெளிவாகக் காணப்படும்?
(1) திரள் முகில் (2) கருமுகில் (3) கீற்று முகில் (4) படை முகில்

27. காதுகளை மையமாகக்கொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் ஊடகம் எது?

(1) 
(2) 
(3) 
(4) 

28. வெளிநாட்டுத் தபாலை இட வேண்டிய தபாற்பெட்டியின் நிறம் எது?
(1) சிவப்பு (2) பச்சை (3) கறுப்பு (4) நீலம்

29. அஞ்சல் அலுவலகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளும் சேவை எது?
(1) கடவுச் சீட்டைப் பெறுதல் (2) தேசிய அடையாள அட்டை பெறுதல்
(3) காசுக் கட்டளை அனுப்புதல் (4) துவிச்சக்கர வண்டி அனுமதிப்பத்திரம் பெறல்

30. விளக்குத் திரியின் வழியே விரைவில் மேல்நோக்கிச் செல்லும் திரவம் எது?
(1) தேங்காய் எண்ணெய் (2) பசு நெய்
(3) கடுகெண்ணெய் (4) மண்ணெண்ணெய்

★ *சரியான விடை எழுதுக.*

31. காற்று வலு மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் மாவட்டம் எது? ……………
32. இலங்கையில் இயற்கைத் துறைமுகம் எங்கு அமைந்துள்ளது? ……………
33. வடமத்திய மாகாணத்தில் உள்ள மாவட்டங்கள் எவை?
……………
34. இலங்கையின் மிக உயரமான மலை எது? ……………
35. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் யார்? ……………
36. கிராம சேவையாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளும் சேவைகள் 2 தருக.
……………
……………
37. இரும்புச்சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது? ……………
38. சிங்கள மக்களின் தேசிய உணவு எது? ……………

★ **விளையாட்டுகளுக்கு உரிய படங்கள் கீழே காணப்படுகின்றன. அவற்றின் பெயர்களை எழுதுக.**

39.  ……………

40.  ……………

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

கடந்த வாரம் பிரசுரமான தமிழ் மாதிரி வினாத்தாளுக்கான விடைகள் 15ஆம் பக்கத்தில்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலுக்கு உயிர்

**'இலங்கையில் வருடாந்தம் சுவாசம் மற்றும் இருதய நோய்களினால் 80 சதவீதமான அளவு மரணங்கள் நிகழ்கின்றன. இது முழு மரண எண்ணிக்கையில் 70 சதவீதமாகும்'**



**எமது இருதயத் துடிப்பானது உடலில் உயிர் இருக்கும்வரை தொடர்ந்து நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றது. தாயின் வயிற்றில் இருக்கும் போதே இருதயத்துடிப்பு ஆரம்பமாகிவிடுகின்றது. அது அடங்கும்போது மனிதனும் இறந்துவிடுகின்றான். இருதயத்தினைப் பாதுகாக்க வேண்டின் இருதய நோய்கள், சுவாச நோய்களிலிருந்து நாம் பாதுகாப்புப் பெறுவது மிக அவசியமாகும்.**

## இருதயநோய் ஆபத்துக்கள்

உலகில் வருடமொன்றுக்கு 17.2 லட்சம் பேர் இருதய நோயினால் பாதிப்புக்குள்ளாகி மரணமடைகின்றனர் என்று ஆய்வொன்றிலிருந்து தெரியவந்துள்ளது. புகையிலைப் பாவனை, ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கம், சுறுசுறுப்பின்மை என்பனவற்றை தவிர்த்துக்கொள்வதன் ஊடாக குறைந்தது 80% வரையான இருதய நோய்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும். இலங்கையில் வருடாந்தம் சுவாசம் மற்றும் இருதய நோய்களினால் 80 சதவீதமான அளவு மரணங்கள் நிகழ்கின்றன. இது முழு மரண எண்ணிக்கையில் 70 சதவீதமாகும்.

## மாரடைப்பு என்றால் என்ன?

இருதயம் உடலின் முக்கிய உறுப்பாகும். இது உடலுக்குத் தேவையான குருதியை விநியோகிக்கின்றது. அத்துடன், இருதயத்தின் சிறந்த செயற்பாட்டிற்கு குருதிச் சுற்றோட்டம் மிகச் சிறப்பாக நடைபெறவேண்டும். இருதயக்குழாய்ச் சுவர்களில் கொழுப்பு படியும்போது குருதிக் குழாய்கள் சுருங்குகின்றன. இந்த இடத்தில் குருதிப் படிவு ஏற்பட்டு, குருதி உறையும் நிலை ஏற்படுகின்றது. இதனால், இருதயத்திற்கான குருதிச் சுற்றோட்டம் தடைப்படுகின்றது. இவ்வாறு குருதிச் சுற்றோட்ட நாளத்தில் தடை ஏற்படும் பட்சத்தில் அந்த நாளத்தினூடாக குருதியை விநியோகிக்கும் இருதய தசைக் கலம் இறக்க நேரிடுகின்றது. இச்செயற்பாடு துரித கதியில் அல்லது படிப்படியாக நடைபெறலாம். இதனையே 'மாரடைப்பு' என்கின்றோம்.

## மாரடைப்பு ஏற்படுவதற்கான காரணங்கள்

- புகைபிடித்தல்
- குருதியில் கொலஸ்ட்ரோல் அளவு அதிகரிப்பு
- உயர் குருதி அழுத்தம்
- நீரிழிவு
- உடல் எடை அதிகரிப்பு
- உடற் பயிற்சியின்மை
- பரம்பரை மற்றும் அதிக மதுபாவனை

இவற்றில் ஏதேனும் விடயங்கள் இருப்பின், இருதய நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.

## மாரடைப்பை இனங்காணல்

- நெஞ்சுப்பகுதியில் ஏற்படும் வலி அல்லது அசௌகரியம்.
- கைகள், கழுத்து, முதுகு, வயிற்றின் மேற்பாகம் போன்ற பகுதிகளில் ஏற்படும் வலி அல்லது அசௌகரியம் மற்றும் மூச்சுத் திணறல்.
- அதிக வியர்வை, வாந்தி.

## மாரடைப்பு ஏற்பட்டால் செய்யவேண்டியது

- வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது மாரடைப்பு ஏற்படின், வேலையை நிறுத்திவிட்டு சற்று நேரம் ஓய்வெடுத்தல்.
- உட்கார்ந்திருப்பதன் மூலம் சுவாசிப்பதற்கு இலகுவாக இருப்பதாக உணர்ந்தால் அவ்வாறு செய்வது சிறந்தது.
- GTN மாத்திரையொன்றை நாக்கின் அடியில் வைத்தல்.
- எஸ்ப்ரின் மாத்திரையை மென்று விழுங்குதல்.
- அருகில் உள்ள வைத்தியசாலைக்கு உடனே அழைத்துச் செல்லுதல்.

## மாரடைப்பின்போது செய்யக்கூடாதவை

- நடத்தல் அல்லது களைப்படைதல்.
- நீரைத் தவிர வேறு எதனையும் அருந்துதல் அல்லது உட்கொள்ளுதல்.
- வாகனம் ஓட்டுதல்.

## ஆரோக்கியமான வாழ்க்கைக்கு...

முற்காலத்தில் மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் வயது முதிர்ந்தவர்களுக்கே அதிகம் இருந்தது. ஆனால், தற்போது வயது வித்தியாசமின்றி இளம் பருவத்தினர் மத்தியிலும் இந்த நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

இளம் பருவத்தினரைப் பொறுத்தவரை பெரும்பாலான நேரங்களை பாடசாலை, கற்கை நிலையங்கள், தொழில் நிறுவனங்களிலேயே கழிக்கின்றனர். இதன்போது கடைகளில் விற்கப்படுகின்ற உணவுகளை அவர்கள் நாடுவது அதிகம்.எனவே, அவ்வாறான உணவுகளை உட்கொள்வதனைத் தவிருங்கள். இயன்றளவு வீட்டில் தயாரிக்கப்படும் உணவு வகைகளையே எடுத்துச்செல்லுங்கள். அதிகமாக பழங்களையும் காய்கறிகளையும் உணவில் சேருங்கள். அத்துடன், உப்பு அதிகம் உள்ள உணவு வகைகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். நாளாந்தம் உடலுக்கு 5 மி.கிராமிலும் குறைவான அளவு உப்பே தேவைப்படுகின்றது.

படிப்பு அல்லது தொழிலில் முழுக் கவனத்தை செலுத்துவதோடு உடல் களைப்படையும் அளவுக்கு விளையாட்டு மற்றும் இதர வேலைகளிலும் ஈடுபடுங்கள். அன்றாடம் உடற்பயிற்சிகளைச் செய்யுங்கள்.இளம் பருவத்திலிருந்தே மது அருந்துதல், புகைபிடித்தல்,போதைவஸ்துப் பாவனைகளை முற்றாகத் தவிர்த்துக்கொள்ளப் பழகுங்கள். இதன் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழிவகுக்கமுடியும். உயரத்திற்கு ஏற்ற உடல் நிறையை தக்கவைத்துக் கொள்ளுங்கள்.

இதனூடாக மாரடைப்பு மட்டுமன்றி,




தவிர்க்கப்பட வேண்டிய உணவு வகைகள்

பழங்கள், மரக்கறி வகைகளை அதிகம் உணவில் சேர்த்துக்கொள்ளுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ர் கொடுக்கும் இருதயம்

உயர் குருதி அழுத்தம், பக்கவாதம், நீரிழிவு என்பன ஏற்படுவதையும் தடுக்கலாம்.




## இருதயம் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம்

**1. சிறப்பான வாழ்க்கைக்கு:**

மாரடைப்பு மற்றும் இதர இருதய நோய்கள் காரணமாக உயிரிழப்பவர்கள் பெரும்பாலும் 15-19 வரையான வயதுக்கிடைப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். இது வாழ்வின் சிறப்பான, பெறுமதியான காலகட்டமாகும். எனவே, இந்த வயதுகளில் மாரடைப்பு மற்றும் இருதய நோய்களால் அவஸ்தைப்படுவது கவலைக்குரிய விடயமாகும். சிறந்த வழிமுறைகளைப் பின்பற்றுவதனூடாக இருதயம் பாதுகாக்கப்பட்டு நீண்ட ஆயுள் கிட்டும்.



**2. தனிப்பட்ட நலன்களை வளர்த்துக்கொள்வதற்கு:**

உடலை வருத்திச் செயற்படுவோரின் மனநிலை எப்போதும் சிறப்பானதாகவே இருக்கும். அவர்களால் மற்றவர்களுடன் சிறந்த தொடர்புகளைப் பேணக்கூடியதாக இருக்கும். தன்னம்பிக்கை அதிகமாக ஏற்படும். இதனால் சுறுசுறுப்புடன் இயங்கலாம்.

**3. சமூகத்துடனான தொடர்பைப் பேணுவதற்கு:**

நல்ல பழக்கவழக்கங்கள் உடைய நண்பர் குழாமை அதிகரித்துக் கொள்ளல், பொது வேலைத்திட்டங்களில் ஈடுபடல் என்பன சிறப்பான மனநிலைக்கு ஏதுவாகும். இதனூடாக சமூகத்துடன் இணைந்து செயற்படுவதற்கான வாய்ப்புகள் கிடைக்கின்றது. இவை மனதுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

## சிகிச்சை முறைகள்

மாரடைப்பிற்கான சிகிச்சை முறைகள் மூன்று வகைப்படும்.

1. என்ஜியோப்ளாஸ்டி (Angioplasty)
2. ஸ்டென்டிங் (Stenting)
3. பைபாஸ் சத்திரசிகிச்சை (Bypass Surgery)

இவை செலவுகூடிய சிகிச்சை முறைகளாகும். இவற்றுக்கு அரசின் பணத்தைப் போன்றே நமது சொந்த, பணமும் விரயமாகின்றது. இந்த நிலையைத் தவிர்க்க மாரடைப்புக்கு ஏதுவான புகைபிடித்தல், மது பாவனை, சுறுசுறுப்பின்மை, தவறான உணவுப்பழக்கம் என்பனவற்றைத் தவிர்க்கவேண்டும்.


எதை, எங்கு படிச்சாலும் ENGLISH ஐ யும் சேர்த்து படிங்க.

Nithya's English Home Study Pack வீட்டிலிருந்தே ஆங்கிலம் கற்க இலகு வழி

இலங்கையில் முன்னனி தொலைக் கல்வி நிலையமான JEI கல்வி நிலையம் தமிழ் மக்களின் ஆங்கில கல்வி வளர்ச்சியில் கவனம் கொண்டு ஆங்கில கற்கை போதி ஒன்றை அறிமுகம் செய்கிறது. சரளமாக ஆங்கிலத்தில் எழுத,பேச,வாசிக்க 45 நாட்களில் வீட்டிலிருந்தவாரே பயிற்சி பெ

ENGLISH HOME STUDY PACK

யாருக்காக...?

★ வெளிநாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு
★ தொழில் வாய்ப்புகளை தேடுவோருக்கு
★ தொழில் புரிவோருக்கு ★ இல்லத்தரசிகளுக்கு
★ 8 ம்ஆண்டுக்கு மேல் கல்வி பயிலும் மாணவர்களுக

பாடநெறி முடிவில் DiP In English-L 1 சான்றிதழ்கள் வழங்கப்படும்.

Home Study Pack ஒன்றில் அடங்குபவை .....?

★ 12 ஆங்கில பேச்சு பயிற்சி புத்தகங்கள் (ஆங்கில பேச்சு பயிற்சி, இலக்கணம், கவிதைகள் குறுக்கெழுத்து போட்டி, கடிதம் எழுதுதல், சிறுகதைகள், கட்டுரைகள் உள்ளடக்கிய புத்தகம்)
★ ஆங்கில பேச்சு பயிற்சி Audio cd -1
★ CD Guide Book - CD வழி காட்டி புத்தகம்.
★ The Necklace Story Book த நெக்லஸ் சிறுகதை புத்தகம்.
★ Jei Logo Printed Bag, விசேடமாக தயாரிக்கப்பட்ட Bag
★ Answer Sheets விடை எழுதும் பத்திரங்கள்.

Home Study Pack ஒன்றை பெறுவது எப்படி ?

நீங்கள் Study Pack ஐ பெற விரும்பின் VJ என -Type செய்து பின்னர் உங்கள் Name, Address, T.p.No.Age , என்பவற்றை 0777-806 606 SMS செய்யுங்கள். Study Pack அருகே இருக்கும் தபால் கந்தோருக்கு அனுப்பப்படும்.பின்னர் 1950/- செலுத்தி பெறலாம்.

மத்திய மாகாணத்தில வசிக்கும் மாணவர்களுக்கு விசேட க்ட்டண கழிவு.

மத்திய மாகாணத்தில் இருந்து விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு வ்சேட கட்டண கழிவாக ரூ - 300/- வழங்கப்படும். மத்திய மாகாணத்தில் இருந்து விண்ணப்பிக்கும் மாணவர்கள் VJ- CP என Type செய்து உங்கள் பெயர் முகவரி வயது என்பவற்றை 0777 — 806 606 என்ற இலக்கத்திற்கு SMS செய்யவும்.



இலங்கையின் வேறு இடங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் 1950/- செலுத்த வேண்டும்.

12 பாடப் புத்தகங்களில் காணப்படும் பயிற்சிகளுக்கு விடைகளை எழுதி எமக்கு அனுப்ப வேண்டும்.

JEI INSTITUTE

P.O.BOX.119 KANDY.
0814-92 91 93


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காக்கை அண்ணா வாருங்கள்

காக்கை அண்ணா வாருங்கள்
கார வடையைத் தருகிறேன்
பொக்கைக் கிழவியை தேடியே
போக வேண்டாம் நீங்களும்!

திருடி வடையைத் தின்பது
தீமையன்றோ காகமே
நரியும் உம்மை ஏய்த்திடும்
நிலையும் உமக்குத் தேவையோ!

எங்கள் வீடு வாருங்கள்
இலையைப் போட்டு வடைகளை
உங்களுக்கு விருந்தென
உண்ண நானும் தருகிறேன்!

ஒன்றுகூடி உண்டிடும்
உயர்ந்த பண்பு உள்ள நீர்
நன்று எங்கள் வீட்டையே
நாடி வந்து சேருங்கள்!

# இன்கா நாகரிகம்



'இன்கா' இன மக்கள் தென் அமெரிக்காவின் குஸ்கோ நகரை அண்டிய பிரதேசங்களில் வாழ்ந்து தமது நாகரிகத்தை ஏற்படுத்தியிருந்தார்கள். இது பெரு நாட்டின் அந்தீஸ் மலைத்தொடரை அண்டிய பிரதேச மாகும். இவர்களின் தலைவர் 'சிங்கி ரொக்கா' எனும் பெயரில் அழைக்கப்பட்டார். இதுபற்றி 'டொப்பா இன்கா' என்று சொல்லப்படும் கவிதையில் கூறப்பட்டுள்ளது.


நூறு குடும்பங்கள் ஓர் அலகாகப் பிரிக்கப்பட்டு அவர்களுக்கு விவசாயத்திற்கான நிலம் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருந்தது. சோளம், உருளைக்கிழங்கு, தக்காளி ஆகியன பயிரிடப்பட்டன. முதன்முதலாக உருளைக்கிழங்கைப் பயிரிட்டவர்கள் இவர்களேயாவர். அத்துடன், கால்நடை வளர்ப்பையும் இவர்கள் மேற்கொண்டிருந்தனர். பன்றிகளும் வாத்துகளும் வளர்க்கப்பட்டு வந்தன. பொருட்களை ஏற்றிச் செல்வதற்குச் சில்லுகள் இல்லாத காரணத்தினால் 'லாமா' என்ற மிருகத்தைப் பயன்படுத்தி வந்தனர். மக்கள் பன்னிரெண்டு சமூகங்களாகப் பிரிக்கப்பட்டு அவர்களுக்குத் தொழிலும் வேறாக்கப்பட்டு



கொடுக்கப்பட்டிருந்தன. போர்ச்சேவை, தகவல் கொண்டு செல்லும் சேவை, பாதை அமைத்தல் போன்றவை இவற்றில் அடங்கும். விடாமல் ஓடுவதன் மூலம் தகவல்கள் கொண்டு செல்லப்பட்டன. இவர்கள் பருத்தி உற்பத்தி மூலம் அலங்காரமான புடைவைகளை நெய்திருந்தனர். அவர்களால் செம்மறியாடுகள் வளர்க்கப்பட்டு ரோமங்களும் பெறப்பட்டன. குடிசைக் கைத்தொழில் மேம்பட்டுக் காணப்பட்டது. அலங்காரமான பாத்திரங்களும் வனையப்பட்டன. முன்னேற்றகரமான நீர்ப்பாசன முறைகளும் காணப்பட்டன. பெருந்தெருக்கள் தொகுதிகளும் அமைக்கப்பட்டுக் காணப்பட்டன. இதற்காக அவசியமான பொறியியல் முறைகளும் கையாளப்பட்டிருந்தன. செதுக்கல் கலை பற்றிய அறிவையும் இவர்கள் கொண்டிருந்தனர். 1532 ஆம் ஆண்டு ஸ்பானிய இனத்தவரான 'பிரான்சிஸ்கோ பிசாரோ' இவர்களின் நகரத்தின் மீது ஆக்கிரமிப்பை ஏற்படுத்தினான். இதனால், 1570 இல் இவர்களது பேரரசு வீழ்ச்சியுற்றது.

**என்.எப்.அய்மா,**
**தரம் - 9B,**
**கமு/அல்-ஹம்றா வித்.,**
**மருதமுனை.**

# ஒட்சிசன் கண்டுபிடிப்பு





மனிதன் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமான ஓர் வாயுவே ஒட்சிசனாகும். இது ஒரு ரசாயனப் பதார்த்தமாகும். இவ்வாயு சுவீடனைச் சேர்ந்த கான்ஸ் கீல், மற்றும் ஆங்கிலேய நாட்டைச் சேர்ந்த ஜோசப் பிறிஸ்றிலி எனும் இரு ரசாயன அறிஞர்களினால் தனித்தனியாக சுதந்திரமான ஆய்வுகளின் மூலமாக கண்டுபிடிக்கப்பட்டது.

ஸ்கீல் என்பவரே முதன்முறையாக ஒட்சிசனைத் தயாரித்ததாக அவரது குறிப்புப் புத்தகங்கள் காட்டுகின்ற போதிலும் அது பற்றிய விபரங்களை வெளியிடுவதற்கு முன்பாக பிறிஸ்றிலி இரச ஒட்சிசனை வெப்பமேற்றுவதன் மூலம் தயாரிக்கும் முறையை விபரித்திருந்தார்.

பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற விஞ்ஞானியான இலவோசியர் பொருட்களின் தகனத்தில் அடங்கியிருக்கும் மர்மத்தில் மிக ஆர்வம் காட்டியமையால் புதிதாக கண்டுபிடித்த இவ்வாயுவில் அதிக ஆர்வத்தைக் காட்டினார். இவ்வாயுவில் பொசுபரசு, கந்தகம் போன்ற பல மூலகங்கள் எரிவதனால் உண்டாகும் பொருட்கள் நீருடன் தாக்கம் புரிந்து அமிலக் கரைசலை உண்டாக்குவதன் காரணமாக அப்பொருளுக்கு ஒட்சிசன் எனப் பெயரிட்டார். இவ்வாயுவிற்கு முதன்முறையாக ஒட்சிசன் எனப் பெயரிட்டவர் இவரே ஆவார்.

**நுஸ்றா சித்தீக்,**
**முஸ்லிம் மகளிர் அரபுக் கல்.,**
**கள்-எளிய,**
**அட்டாளைச்சேனை.**



# சிரிப்பு சிறந்த மருந்து



வாய்விட்டுச் சிரிப்பதனால் நோய் விட்டுப்போகும் என்பார்கள். சிரிக்கும்போது என்டபின்ஸ் (Endorphins), என்கெபலின்ஸ் (Enkephalins) என்னும் சுரப்புகள் சுரக்கின்றன. இவை உடலில் வலியைத் தாங்கக் கூடிய திறனை அதிகரிப்பதாகக் கூறப்படுகின்றது. மேலும், உடலின் நோய் எதிர்ப்புச் செயற்பாட்டிலும் ஈடுபடுகின்றன.

அதிகம் சிரிப்பவர்களை இதயத்தாக்கு நோய்கள் தாக்குவதில்லை. இரத்தக் குழாயில் அடைப்புக்கள் இருப்பவர்கள் சிரிக்கும்போது அவ்வடைப்பு விடுவித்துக் கொள்ளப்படுகின்றது. சிரிக்கும்போது உடல் குலுங்கிக் குலுங்கி அசைக்கப்படுவதால் உடலுக்கான அப்பியாசம் இயற்கையாகக் கிடைக்கின்றது. நீரிழிவு நோயாளியின் குருதியில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் ஒவ்வாமை நிவாரண மருந்துகளின் செயற்றிறனை அதிகரிக்கவும் சிரிப்பு உதவுகின்றது. மேலும், மன இறுக்கத்தைப் போக்கவும் பதற்றத்தைத் தணிக்கவும், ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும் சிரிப்பு உதவுகின்றது.

மு.பிரியங்கா, தரம் - 9, மன்/அ.மு.க.பாட., தலைமன்னார்.

# அழகானதும் மிக அழகானதும்

* நீதி புரிதல் அழகு.
  *அது தலைவர்களிடம் இருப்பது மிக அழகு.*
* தயாளத் தன்மை அழகு.
  *அது செல்வந்தர்களிடம் இருப்பது மிக அழகு.*
* பேணுதலாய் இருப்பது அழகு.
  *அது ஆசிரியர்களிடம் இருப்பது மிக அழகு.*
* பொறுமை கொள்வது அழகு.
  *அது ஏழைகளிடம் இருப்பது மிக அழகு.*
* நாணம் கொள்வது அழகு.
  *அது பெண்களிடம் இருப்பது மிக அழகு.*
* பொறுப்பாய் இருப்பது அழகு.
  *அது வாலிபர்களிடம் இருப்பது மிக அழகு.*
* உண்மை பேசுவது அழகு.
  *அது குற்றவாளிகளிடம் இருப்பது மிக அழகு.*



தொகுப்பு:
சப்னா ரஹ்மதுல்லாஹ், தரம் - 8C,
முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி,
கள்-எளிய.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3183
ஆர்.பார்த்தீபன், தரம் - 10, டிம்புள்ள த.ம.வித்., பத்தனை.


அங்.இல: 3184
ஏ.ரஹ்மான், தரம் - 7E, ஸாஹிரா ஆ.கல்., கடுகஸ்தோட்டை.


அங்.இல: 3185
ச.ஜனனி, தரம் - 11, யா/மிருசுவில் அ.த.க.பாட.,மிருசுவில்.


அங்.இல: 3186
உ.யசோதன், தரம் - 9A, விக்னேஸ்வரா ம.வித்., திருகோணமலை.


அங்.இல: 3187
எஃப்.ஸஃபீயா, தரம் - 2A, மாலிகாஹேன மு.ம.வித்.,பேருவளை.


அங்.இல: 3188
ச.திருக்குமரன், தரம் - 7E, தமிழ் ம.ம.வித்., வவுனியா.


அங்.இல: 3189
ஆயிஸா றுஸாதா, தரம் - 5A, பொலன்னறுவை மு.ம.க., பொலன்னறுவை.


அங்.இல: 3190
எம்.டில்ஷாட், தரம் - 4, தெஹி/நா.மு.ம.வித்., நாப்பாவல.


அங்.இல: 3191
இ.லிஸ்ரிக்கா, தரம் - 6, மடுக்கரை அ.த.க.பாட., மன்னார்.


அங்.இல: 3192
அமீனுல் அஸ்லம், தரம் - 6B, மட்/மீ.அல்-ஹிதாயா ம.ம.வித்., மீராவோடை.


அங்.இல: 3193
ச.யுதாகரன், தரம் - 6, இறம்பைக்குளம் ம.ம.வித்., வவுனியா.


அங்.இல: 3194
எம்.எம்.நதா, தரம் - 3C, ஸாஹிரா தே.பாட., மாவனல்லை.


அங்.இல: 3195
கோ.சாருஜன், தரம் - 11B, யாழ்.வைத்தீஸ்வரா கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3196
சி.சுஜானா, உயர்தரம் (கலை), இந்து ம.கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3197
எஃப்.மல்ஹறா, தரம் - 5C, அல்-அஸ்ரப் ம.ம.வித்., சம்மாந்துறை.


அங்.இல: 3198
சதீக்கா பர்வின், தரம் - 9B, பாத்திமா மு.ம.வித்., திருகோணமலை.

## தமிழ் மாதிரி வினாத்தாளுக்கான விடைகள்

*(நொவெம்பர் 25 ஆம் திகதி பிரசுரமானது)*

01. திறந்த வெளிகளில்
02. கற்களைக் கூர்மையாக்கி
03. கூர்மையான கல் ஆயுதம்
04. குகைச் சுவர்களில்
05. தினசரி வாழ்க்கையையும் வேட்டையில் அடைந்த வெற்றிகளையும்
06. அவன் அல்லது அவர்
07. அழைப்பிதழ் 08. வெள்ளப்பெருக்கு
09. பல்கலைக்கழகம் 10. சந்தனம்
11. (3) 12. (3) 13. (1) 14. (4)
15. (4) 16. (2) 17. (3)
18. மகிழ்ச்சி
19. சிந்தனையாளர் 20. பொல்லாங்கு
21. ஐயா! பாபு வழுக்கி விழுந்துவிட்டான்.
22. "மென்லோ பூங்கா மந்திரவாதி" என அழைக்கப்பட்ட மனிதரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?
23. தாத்தாவும் பேரனும் திகைத்துப் போய் அசையாமல் சிறிது நேரம் நின்றனர்.
24. சிடன் தனது குருவிடம் சென்று நடந்தவற்றைக் கூறினான்.
25. ஒற்றுமை பலன் தரும் அல்லது சகலரும் ஒற்றுமையுடன் செயற்பட்டால் பலன் அதிகரிக்கும்.
26. நோய் இல்லாத வாழ்வே மிகப்பெரிய செல்வம்.
27. பறவைகள் இரை தேடி வானில் பறந்தன.
28. நாங்கள் அழகான ஓவியங்கள் வரைவோம்.
29. மனிதர்கள் மிகவும் இரக்க சுபாவம் உடையவர்கள்.
30. சாந்தியும் மாலாவும் கோயிலுக்குச் செல்கின்றார்கள்.
31. மான்குட்டி துள்ளித் துள்ளி ஓடுகின்றது.
32. குமார் நூலகத்திற்கும் சுஜன் பாடசாலைக்கும் சென்றனர்.
33. நாங்கள் மாலை வேளையில் விளையாடுவோம்.
34. கண்ணன் விளா மரத்தில் ஏறும்போது சறுக்கி விழுந்தான்.
35. எழுவாய் பயனிலையுடன் பொருத்தமான ஆறு வாக்கியங்கள் இருத்தல் வேண்டும்.

## வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' பரிசுகள்




இது, வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' உற்பத்தி கல்வி உபகரணங்களை பரிசுகளாக அள்ளித்தரும் 'வீரோதார-விஜய்' குறுக்கெழுத்துப்போட்டி. இவ்வார 'விஜய்'யை வாசிக்கும்போதே இந்த போட்டிக்கான அநேக விடைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கான பரிசுகளின் விபரம் வருமாறு;

★ **முதலாம் பரிசு**
ரூபா 3,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **இரண்டாம் பரிசு**
ரூபா 2,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **மூன்றாம் பரிசு**
ரூபா 1,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **10 ஆறுதல் பரிசுகள்**
ஒவ்வொருவருக்கும் ரூபா 500 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்.

விடைகளை நிரப்பி-கத்தரித்து-தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி 09.12.2009 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி;

**வீரோதார-விஜய்
குறுக்கெழுத்துப் போட்டி இல: 21
'விஜய்',
த.பெ.இல: 2037, கொழும்பு.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 செ | ல் | 2 வ | ந் | 3 த | ர் |
| ம் | ■ | று | ■ | ந் | ■ |
| 4 பு | 5 து | மை | ■ | 6 த | யை |
| ■ | ன் | ■ | ■ | ம் | ■ |
| 7 சு | ப | ■ | ■ | ■ | 8 லி |
| ■ | 9 ம் | க | ட | ட் | ஒ |

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 19 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

**முதலாம் பரிசு**
டி.எபென் கிரேசன்,
8, தேவாலய றோட்,
பாகொட,
நுகேகொட.

**இரண்டாம் பரிசு**
ஆர்.சிரோமி,
12/1, விதான்ஸ் லேன்,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

**மூன்றாம் பரிசு**
ச.நஸீமா,
12, கணேஸ் லேன்,
திருகோணமலை.

### ஆறுதல் பரிசுகள்

பி.ஜே.பவுஸ்தினா,
30/12, வேலுவன வீதி,
கொழும்பு-09.

எம்.எம்.நுப்ஸா நஸ்ரின்,
D10/1, நாங்கல்ல,
துல்ஹிரிய.

எம்.திமோக்தாஸ்,
111/19,
விவேகானந்த மேடு,
கொழும்பு-13.

ஆர்.ரீஸா அஹமட்,
நிகவெவ,
அ/கணேவல்பொல,
கெக்கிராவ.

யூ.விஷாக்கா மிலேனியா,
43/2, சிவன்கோயில் வீதி,
தோணிக்கல், வவுனியா.

எம்.என்.நஸ்ஹா,
55A,ஷர்மிலாஸ்,
யோனகபுர,
திக்குவல்லை.

அக்ஷயா முரளிதரன்,
கடற்கரை வீதி,
களுதாவளை-03,
களுதாவளை.

எம்.எம்.எம்.மின்ஹார்,
68, அக்குரஸ்ஸ றோட்,
தெனிப்பிட்டிய, வெலிகம.

கு.துவிஷா,
9A, மகிந்த பிளேஸ்,
கிருலப்பனை,
கொழும்பு-06.

ஏ.சி.பாத்திமா ருகையா,
65/19, சென் ஜோசப் வீதி,
கொழும்பு-14.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | மீ | | 2 | | |
| | ■ | ■ | | ■ | ■ |
| மை | ■ | 3 | | | ■ |
| ■ | ■ | ■ | ளை | ■ | 4 |
| 5 | | 6 தை | ■ | ■ | ரு |
| | ■ | | ■ | 7 | |

பெயர் : ..........
வீட்டு முகவரி : ..........
..........
தொலைபேசி இல : ..........
பாடசாலை : ..........
அருகிலுள்ள நகரம் : ..........
மாவட்டம் : ..........

### மேலிருந்து கீழ்

1. வெற்றி பெற இது தேவை.
2. உத்தரவு என்றும் சொல்லலாம்.
4. ஆயுதம் இதன் ஒத்த சொல்.
5. கிழமைகளில் ஒன்று.
6. வழி என்றும் சொல்லலாம். (தலைகீழாக உள்ளது)

### இடமிருந்து வலம்

1. நீரில் வாழும் பெரிய உயிரினம்.
3. ஆசிரியர் சொல்லித் தருவது.
5. இங்கும் பொருட்கள் வாங்கலாம்.
7. இதனை மதியால் வெல்லலாமென்பர். (திரும்பி இருக்கிறது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில், மாவடிப் பள்ளி அல்-அஷ்ரப் மகா வித்தியாலயத்தின் குருளைச் சாரணியர்களுக்கான சின்னம் சூட்டும் விழா நடைபெற்றது. இந்த விழாவின்போது பாடசாலை குருளைச் சாரணிய தலைவியும் மாவட்ட குருளைச் சாரணிய தலைவியுமான மஷூறா சுஹூறுத்தீன், குருளைச் சாரணியர் ஒருவருக்கு சின்னம் சூட்டுவதை படத்தில் காணலாம்.



## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு

கல்முனை, ஹனீபா கல்லூரியின் ஆங்கிலத் தினப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழாவில் கல்லூரியின் அதிபர் என்.எம்.நௌஷாட், மாணவி ஒருவருக்குப் பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்குவதையே படத்தில் காண்கின்றீர்கள்.

(தகவல்: நிப்றாஸ் மன்சூர்-'விஜய்' இளம் செய்தியாளர்)




# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

## பரிசுப் பொதியுடன் நத்தார் தாத்தா



ந.மலரினி, தரம் - 9B,
பாடசாலை C1B (வலயம்-04),
வவுனியா.



ஃபாத்திமா ஃபரா,
தரம் - 10A, நு/மெதடிஸ்ட் கல்.,
கந்தப்பளை.



ருக்ஸானா,
தரம் - 10, அல்-அரபா மு.வித்.,
பஹல கொரகோய.

## பரிசுப் பொருட்கள்



எம்.ஏ.எஃப்.அகீலா, தரம் - 7B,
க/அஸ்ஹர் கல்., அக்குறனை.



எம்.என்.எஃப்.ருப்தா, தரம் - 8T,
முஸ்லிம் ம.கல்., காலி.

## கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்



ஷிம்லா ஸாஜஹான், தரம் - 6B,
ஹம்ஸா மு.ம.வித்.,கொழும்பு-15.




அஸ்கா ஏ.ரஸ்ஸாக், தரம் - 7C,
அல்-மின்ஹாஜ் தே.பாட.,
ஹபுகஸ்தலாவை.

## படகோட்டி



எம்.எஸ்.சம்ரூத், தரம் - 11A,
பறகஹதெனிய தே.பாட.,
குருநாகல்.

## கிறிஸ்மஸ் மரம்




எஸ்.மார்க் ரொனி,
தரம் - 3C, சரஸ்வதி கனிஷ்ட வித்.,
பதுளை.




எம்.எச்.ஆயிஷா,
தரம் 2B, அல்-அதான் ம.கல்.,
பதுளை.

## துடுப்பு மட்டையும் பந்தும்



எம்.எம்.எம்.ரிப்னாஸ், தரம் - 5,
தாருல் உலூம் மு.ம.வித்.,
இறம்புக்கனை.



மொஹமட் முஸான், தரம் - 1B,
அல்-புர்கான் மு.ம.வித்.,
கலேவெல.




## கைவண்ணங்கள் த.பெ.எண் 2037 கொழும்பு



வி.தினுஷ்கா, தரம் - 4A,
கிங்ஸ்டன் சர்வதேச பாட.,
கொழும்பு-15.



எஃப்.ஹஃப்ஸா ஜானி,
தரம் - 9Z,
ஸாஹிரா தே.பாட.,
மாவனல்லை.



எஸ்.சாலினி,
தரம் - 6, எக்பர்த் த.வித்.,
சூரியகந்தை.



எம்.எம்.இல்ஹாம்,
பாலர் வகுப்பு,
லிட்டில் ஃப்ளவர் பாலர் பாட.,
கொழும்பு-12.

## மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

**முடிவுத்திகதி 16.12.2009**

### பெப்ரவரி மாதத்துக்கான தலைப்புகள்

★ தரம் 1-5 - எனது தந்தை அல்லது குருவி
★ தரம் 6-8 - அன்னாசிச் செடி அல்லது பூவும் தேனீயும்
★ தரம் 9-11 - மழைக்காலம் அல்லது பால்மா பெக்கட்

**அன்பார்ந்த தம்பி, தங்கைகளே!**

நாம் கொடுக்கும் தலைப்புகளில் உங்கள் கைவண்ணங்களை விரைவில் அனுப்பி வையுங்கள். தெரிவு செய்யப்படும் கைவண்ணங்கள் இப்பகுதியில் பிரசுரமாகும். எனவே, முயற்சியைக் கைவிடாதீர்கள். அத்துடன் உங்கள் பெயர், தரம், பாடசாலை, கைவண்ணத்தின் தலைப்பு என்பனவற்றை மறக்காமல் எழுதி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு கிடைக்காத அமெரிக்க மக்கள்



அமெரிக்காவில் வசிக்கின்ற மக்களில் 49 மில்லியனுக்கும் அதிகமானோர் கடந்த 2008 ஆம் ஆண்டில் போதியளவு உணவு கிடைக்கப் பெறாதிருந்தனர் என்று ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.



இந்த நிலையை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் உணவு முத்திரை முறையை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இந்த நிலைமையானது எதிர்காலத்தில் இன்னும் பாரியளவில் அதிகரித்து விடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதால் அதனை தவிர்ப்பதற்கான புதிய திட்டங்களை வகுக்க வேண்டியிருப்பதாகவும் அரசாங்கத்துறையினர் அறிவித்துள்ளனர்.

குறித்த ஆய்வின்படி, 2008 ஆம் ஆண்டில் 14.6 சதவீதமான குடும்பங்களுக்கு போதியளவில் தேவையான உணவு வகைகள் கிடைக்கப்பெறவில்லை என்றும் 2007ஆம் ஆண்டளவில் அது 11.1 சதவீதமாக இருந்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# சிம்பாப்வேயில் விலங்குகளை வேட்டையாடுதல் அதிகரிப்பு

சிம்பாப்வே நாட்டில் சட்டவிரோதமாக விலங்குகளைக் கொல்வது அதிகரித்து வருவதாகவும் சர்வதேச மட்டத்திலான கூட்டுத்திட்டத்தின் கீழே இது நடைபெற்று வருவதாகவும் அந்நாட்டின் வனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



இந்த வருடம் ஜனவரி தொடக்கம் ஒக்டோபர் மாதம் வரையான பகுதிகளில் 65 யானைகளும் 30 ரைனோஸரஸ்களும் இவ்வாறு சட்டவிரோதமாக கொல்லப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதில் 24 ரைனோஸரஸ்கள் கறுப்பு நிறத்தையும் மிகுதி 6 வெள்ளை நிறத்தையும் கொண்டவையாகும். குறிப்பாக, கறுப்பு நிற ரைனோஸரஸ்கள் அருகி வரும் இனமாக கருதப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு விலங்குகளை வேட்டையாடுவோருக்கு வெளிநாடுகளில் உள்ள சில அமைப்புக்கள் நிதியுதவி செய்வதாகவும் கொல்லப்படும்



விலங்குகள் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த வருட ஆரம்பத்திலிருந்து இவ்வாறான சட்டவிரோதமான வேட்டைக்காரர்கள் 2,500 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளதுடன், 10 பேர் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாகவும் வனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புகள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்கு பெறுமதிமிக்க பாடசாலை உபகரணங்கள் சிலோன் பென்சில் நிறுவனத்தால் (அற்லஸ்) பரிசாக வழங்கப்படும்.

## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# காலநிலை மாற்றத்தை தடுக்கும் ஒப்பந்தம் நடைபெறாதாம்



இந்த மாதம் (டிசம்பர்) கோபன்ஹெகனில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில், உடன்படிக்கைகள் எவையும் மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் ஆசிய-பசுபிக் பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்ட நாடுகளின் தலைவர்களும் இதனை உறுதி செய்துள்ளனர்.

கோபன்ஹேகனில் நடைபெறுகின்ற மாநாட்டில் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்மான ஒப்பந்தங்களை மேற்கொள்ள முடியாதெனவும் அதற்கான ஓர் ஆரம்ப கட்ட நடவடிக்கையாகவே அதனைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் நடைபெற்ற மாநாட்டின்போதுகூட காபனீரொட்சைட் வாயு வெளியேற்றத்தை தடுப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்வதற்கான எவ்வித தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அற்லஸ் கேள்வி - 232

**கேள்வி:** இம்முறை ஆசிய பசுபிக் பொருளாதார மாநாடு எந்த நாட்டில் நடைபெற்றது?

**சரியான விடை........................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 232,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

## போட்டி இல - 230 இன் சரியான விடை: கோ·ீப் துறைமுகம்


**பரிசு பெறுவோர்**

ஏ.ருஷாதா,
62/R முஸ்லிம் கொலனி,
கதுறுவெல, பொலன்னறுவை.

ஞானேந்திரா கஜவதனன்,
சோதிவேம்படி ஒழுங்கை, மானிப்பாய்.

நே.ஷோபனா,
43, ரெட்ணம் வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.

# தபால் துறையை மேம்படுத்தும் சர்வதேச தபால் சங்கம்




உலக நாடுகளுக்கிடையே தபால் துறை கொள்கைகளை வகுத்து உலகளாவிய ரீதியில் தபால் கட்டமைப்பை செவ்வனே முன்னெடுத்துச் செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள அமைப்பே 'சர்வதேச தபால் சங்கம்' (Universal Postal Union-UPU) எனப்படுகின்றது. இந்த சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்ற நாடுகள் மேற்படி சங்கத்தினால் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளை, நிபந்தனைகளை பின்பற்றக் கடமைப்பட்டுள்ளன.



இந்த சங்கத்தின் தலைமையகம் சுவிட்ஸர்லாந்தில் அமைக்கப்பட்டுள்ளது. 1874 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின்படி, ஆரம்பத்தில் 'தலைமை தபால் சங்கம்' என்ற பெயரில் அமைக்கப்பட்ட அமைப்பே 1878 ஆம் ஆண்டு 'சர்வதேச தபால் சங்கம்' என்று பெயர் மாற்றம் பெற்றது. இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து, அதன் முக்கியத்துவம் மிக்க அங்கத்துவ அமைப்பாக மேற்படி தபால் சங்கம் சேர்த்துக் கொள்ளப்பட்டது.







மேலும், 'முத்திரை சேகரிப்பாளர்களுக்கான அபிவிருத்தி சம்மேளனத்துடனும்' மேற்படி சர்வதேச தபால் சங்கம் தொடர்புகளைக் கொண்டுள்ளது. 2002 ஆம் ஆண்டு தொடக்கம் பாவனையில் இருந்த ஒவ்வொரு நாடுகளினதும் முத்திரைகளைக் கொண்ட இணையத்தள சேவையொன்றையும் இந்த அமைப்பு முன்னெடுத்து வருகின்றது.




## அங்கத்துவ நாடுகள்

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வகிக்கின்ற நாடுகள் இந்த சர்வதேச தபால் சங்கத்தில் அங்கத்துவம் பெறுகின்றன. அதற்கமைய, ஐ.நா.வில் அங்கத்துவம் வகிக்கின்ற 192 நாடுகளில் 188 நாடுகள் மேற்படி சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்றன. மிகுதியான நாடுகளான அன்தோரா, மாஷல் தீவுகள், மைக்ரோ சீனியா,பலாலு குடியரசு ஆகிய நாடுகள் இன்னமும் அங்கத்துவம் பெறாத நாடுகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் பெற்றோர்களுக்கும் ஆசிரியைக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.



ගුරුතුමිය: සියළුදෙනාටම ආයුබෝවන්.
சியலுதெனாடம ஆயுபோவன்.
ஆசிரியை: அனைவருக்கும் வணக்கம்.

දෙමව්පියන්: ආයුබෝවන් ගුරුතුමී.
ஆயுபோவன் குருதுமி.
பெற்றோர்கள்: வணக்கம் ஆசிரியை.

ගුරුතුමිය: අද ඔයාලට එන්න කිව්වේ මේ පන්ති කාමරය පිරිසිදු කරගැනීම ගැන සාකච්ඡා කිරීමටයි.
அத ஒயாலட என்ன கிவ்வே, மே பந்(த்)தி காமரய பிரிசிது கறகெனீம கென சாகச்சா கிறிமடய்.
ஆசிரியை: இந்த வகுப்பறையை சுத்தம் செய்வது பற்றி கலந்துரையாடுவதற்குத்தான் இன்று உங்களை வரச்சொன்னேன்.

දෙමව්පියන්: දැන් අපෙන් මොනවද කෙරෙන්න ඕනේ?
தென் அபென் மொனவத கெறென்ன ஓணே?
பெற்றோர்: இப்போது நாங்கள் என்ன செய்யவேண்டும்?

ගුරුතුමිය: පන්ති කාමරයට තීන්ත ගාන්න ඕනේ.
பந்(த்)தி காமரயட தீன்த கான்ன ஓணே.
ஆசிரியை: வகுப்பறைக்கு சுவர்ப்பூச்சு பூசவேண்டும்.

කැඩිච්ච මේස හා පුටු සදන්න ඕනේ.
கெடிச்ச மேச ஹா புடு சதன்ன ஓணே.
உடைந்த மேசைகள் மற்றும் கதிரைகளை திருத்தவேண்டும்.

ඉතිරි මේස හා පුටු සෝදන්න ඕනේ.
இதிரி மேச ஹா புடு சோதன்ன ஓணே.
எஞ்சியிருக்கும் மேசைகள் மற்றும் கதிரைகளைக் கழுவவேண்டும்.

පන්ති කාමරයට ප්‍රථමාධාර පෙට්ටියක් සවි කරන්න ඕනේ.
பந்(த்)தி காமரயட ப்ரதமாதாற பெட்டியக் சவி கறன்ன ஓணே.
வகுப்பறையில் முதலுதவிப் பெட்டியொன்றும் பொருத்தவேண்டும்.

මේ සේරම කරන්න අපට සල්ලි ටිකකුත් ඕනේ.
மே சேரம கறன்ன அபட சல்லி டிககுத் ஓணே.
இவையெல்லாம் செய்வதற்கு எங்களுக்கு கொஞ்சம் பணமும் வேண்டும்.

දෙමව්පියන්: ඔය සේරටම එක ළමයෙකුගෙන් රුපියල් 250ක් එකතු කරමු.
ஒய சேரடம எக லமயெகுகென் ருப்பியல் 250க் எகது கறுமு.
பெற்றோர்கள்: இவை எல்லாவற்றுக்கும் ஒரு பிள்ளையிடம் இருந்து 250 ரூபாவை சேகரிப்போம்.

ගුරුතුමිය: ඒක හොඳයි. දැන් කවදාද ඔයාලට එන්න පුළුවන්?
ஏக ஹொந்தய். தென் கவதாத ஒயாலட என்ன புலுவன்?
ஆசிரியை: அது நல்லது. எப்போது உங்களால் வரமுடியும்?

දෙමව්පියින්: එන ඉරිදා හොඳයිනේ?
என இரிதா ஹொந்தய்னே?
பெற்றோர்கள்: எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நல்லதுதானே?



ගුරුතුමිය: ආ... එදාට හොඳයි.
ஆ... எதாட ஹொந்தய்.
ஆசிரியை: ஆ... அன்றைய நாள் நல்லது.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

உதா: மேசைகளைக் கழுவவேண்டும்.
**මේස සෝදන්න ඕනේ.**

i. எங்களுக்கு கொஞ்சம் பணமும் வேண்டும்.
...............................................................

ii. எப்போது உங்களால் வரமுடியும்?
...............................................................

iii. ஞாயிற்றுக்கிழமை நல்லது.
...............................................................






## வினா-உடன்பாடு-எதிர்மறை
## Interrogative-Affirmative-Negative

நிகழ்கால தனி வாக்கியங்களில் (Present Simple Tense) காணப்படுகின்ற 'உடன்பாடு' வாக்கியங்களை, 'வினா' வாக்கியங்களாக மாற்றியமைப்பதற்கு, 'Do' எனும் துணை வினைச்சொல் (Auxiliary Verb) உதவி புரிகின்றது என முன்னைய பாடத்தில் கற்றோம் அல்லவா?

அவ்வாறே, நிகழ்கால தனி வாக்கியங்களில் காணப்படுகின்ற 'உடன்பாடு' வாக்கியங்களை, 'எதிர்மறை' வாக்கியங்களாக மாற்றியமைப்பதற்கும் 'Do' எனும் துணை வினைச்சொல் உதவி புரிகின்றது என்பதை நாம் ஞாபகத்தில் கொள்ளவேண்டும்.

✱ வினா, உடன்பாடு மற்றும் எதிர்மறை ஆகிய மூன்று வகை வாக்கியங்களையும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) Do you go to school daily? (Interrogative)
நீ தினமும் பாடசாலைக்குப் போகின்றாயா? (வினா)

(ஆ) Yes, I go to school daily. (Affirmative)
ஆம், நான் தினமும் பாடசாலைக்குப் போகின்றேன். (உடன்பாடு)

(இ) No, I do not go to school daily. (Negative)
இல்லை, நான் தினமும் பாடசாலைக்குப் போவதில்லை. (எதிர்மறை)

✱ do not என்பதன் சுருக்கம் don't என்பதாகும்.

குறிப்பு: மேற்படி வினா வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள 'do' எனும் துணை வினைச்சொல்லுக்கு, தனியான அர்த்தம் கொள்ளப்படுவதில்லை. இங்கே 'do' என்பது உதவி புரியும் வினைச்சொல்லாக (Helping Verb) மாத்திரமே செயல்படுகின்றது.

✱ மேலும் உதாரணங்களை இங்கே அவதானிப்போம்.

(அ) Do you go to the market on sundays? (Interrogative)
நீ ஞாயிற்றுக்கிழமைகளில் சந்தைக்குப் போவதுண்டா? (வினா)

(ஆ) Yes, I go to the market on sundays. (Affirmative)
ஆம், நான் ஞாயிற்றுக்கிழமைகளில் சந்தைக்குப் போகின்றேன். (உடன்பாடு)

(இ) No, I don't go to the market on sundays. (Negative)
இல்லை, நான் ஞாயிற்றுக்கிழமைகளில் சந்தைக்குப் போவதில்லை. (எதிர்மறை)

---

(அ) Do you come here every evening? (Interrogative)
நீ ஒவ்வொரு மாலையும் இங்கே வருகின்றாயா? (வினா)

(ஆ) Yes, I come here every evening. (Affirmative)
ஆம், நான் ஒவ்வொரு மாலையும் இங்கே வருகின்றேன். (உடன்பாடு)

(இ) No, I don't come here every evening. (Negative)
இல்லை, நான் ஒவ்வொரு மாலையும் இங்கே வருவதில்லை. (எதிர்மறை)

---

(அ) Do you eat bread at night? (Interrogative)
நீ இரவில் பாண் சாப்பிடுகின்றாயா? (வினா)
(நீ இரவில் பாண் சாப்பிடுவதுண்டா?)

(ஆ) Yes, I eat bread at night. (Affirmative)
ஆம், நான் இரவில் பாண் சாப்பிடுவதுண்டு. (உடன்பாடு)

(இ) No, I don't eat bread at night. (Negative)
இல்லை, நான் இரவில் பாண் சாப்பிடுவதில்லை. (எதிர்மறை)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




**ஆரம்பத்தில் தவளையைப் பார்த்துச் சிரித்த ஓரகத்திகள் இருவரும் இப்போது சமையற்கட்டில் வேலை செய்த மூதாட்டி ஒருவரை அழைத்து தவளை எப்படி ரொட்டி சுடுகிறது என்பதைப் பார்த்து வர அனுப்பினர்**



# சிறந்த சமையல்காரி யார்?

முற்றத்துக்குத் தத்தித்தத்திச் சென்ற தவளை, அங்கே தனது தவளைத் தோலைக் களைந்துவிட்டு அறிவும் புத்திசாலித்தனமும்மிக்க, வர்ணிக்க முடியாத அளவு அழகிய வசிலீசாவாக மாறியது. அவள் தனது கைகளைத் தட்டிக் கூவினாள்;

''வாருங்கள், எனது தாதிகளே, பணிப்பெண்களே! விரைந்து வந்து வேலையைத் தொடங்குங்கள். என் தந்தை வழக்கமாக அணிவது போன்று ஒரு சட்டையை நாளை காலைக்குள் எனக்குத் தைத்துத் தாருங்கள்''

காலையில் இளவரசன் இவான் கண்விழித்தபோது அங்கே தரையில் தவளை தத்திக்கொண்டிருந்தது. சட்டை தயாராகி அழகிய துணியில் சுற்றப்பட்டு மேசை மீது வைக்கப்பட்டிருந்தது. இதனால், இளவரசன் இவான் பெரு மகிழ்ச்சியுற்றான். சட்டையை எடுத்துக்கொண்டு தன் தந்தையிடம் சென்றான். அவரோ மூத்த மகன்களது அன்பளிப்புகளைப் பெறுவதிலேயே முனைப்பாக இருந்தார். மூத்த மகன் தனது சட்டையை நீட்டியதும் அதை வாங்கிக்கொண்டு அரசர் கூறினார்;

''ஏழை விவசாயி அணிய மட்டுமே இந்தச் சட்டை ஏற்றது''

இரண்டாவது மகன் தனது சட்டையை நீட்டியபோது அரசர் கூறினார்;

''குளியலறைக்குப் போகும்போது அணிய மட்டுமே இந்தச் சட்டை ஏற்றது''

பின்னர் இளவரசன் இவான் தனது சட்டையை நீட்டினான். அதில் தங்கத்தாலும் வெள்ளியாலும் சித்திரத்தையல் வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதைப் பார்த்துவிட்டு அரசர் கூறினார்;

''விழா நாட்களில் அணியத்தக்க சட்டை இதுதான்''

இதன் பின்னர் இரு மூத்த சகோதரர்களும் வீடு திரும்பும்போது தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

''இளவரசன் இவானுடைய மனைவியைப் பார்த்து நாம் சிரித்தது தவறாகத் தோன்றுகிறது. அவள் தவளை அல்ல. அவள் ஒரு சூனியக்காரி''

சிறிது நாட்களின் பின்னர் அரசர் திரும்பவும் தன் புதல்வர்களை அழைத்தார்.

''நாளைகாலைக்குள் உங்கள் மனைவிகள் எனக்காக ரொட்டி சுடட்டும். அவர்களில் சிறந்த சமையல்காரியை நான் அறிய விரும்புகிறேன்'' என்றார்.

இதைக் கேட்ட இளவரசன் இவான் தலை தாழ்த்தி வீடு திரும்பினான். அவன் மனைவியாகிய தவளை அவனிடம் கேட்டது;

''ஏன் இவ்வளவு கவலையாக இருக்கிறாய். இளவரசன் இவான்?''

இளவரசன் கூறினான், ''நாளை காலைக்குள் என் தந்தைக்கு நீ ரொட்டி சுட்டுத்தர வேண்டும்''

''துயரப்பட வேண்டாம், இளவரசன் இவான். நீ படுக்கச் செல்; இன்று இரவை விடக் காலை உனக்குச் சிறந்ததாக இருக்கும்''

ஆரம்பத்தில் தவளையைப் பார்த்துச் சிரித்த ஓரகத்திகள் இருவரும் இப்போது சமையற்கட்டில் வேலை செய்த மூதாட்டி ஒருவரை அழைத்து தவளை எப்படி ரொட்டி சுடுகிறது என்பதைப் பார்த்து வர அனுப்பினர். ஆனால், தவளையோ புத்திசாலித்தனமாக அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதை ஊகித்துவிட்டது. சிறிதளவு மாவைப் பிசைந்து, சூட்டடுப்பின் உச்சியை உடைத்து அந்த ஓட்டைக்குள்ளாக அதை வீசியது. இதனை அவதானித்த மூதாட்டி ஓரகத்திகளிடம் ஓடிச்சென்று நடந்த எல்லாவற்றையும் கூறினாள். அவர்களும் தவளை செய்தது போலச் செய்தனர்.

இவ்வாறே நடைபெறும் என உணர்ந்த தவளை முற்றத்திற்குத் தத்திச் சென்று, அறிவும் புத்திசாலித்தனமும் மிக்க வசிலீசாவாக மாறித் தனது கைகளைத் தட்டினாள்.

''வாருங்கள், எனது தாதிகளே, பணிப்பெண்களே, விரைந்து வந்து வேலையைத் தொடங்குங்கள்'' என்று அழைத்தாள்.

''என் தந்தையினுடைய வீட்டில் நான் வழக்கமாகச் சாப்பிடுவது போன்ற மெதுவான வெண்ணிறமான ரொட்டியை நாளை காலைக்குள் எனக்குச் சுட்டுத் தாருங்கள்''

மறுநாள் காலையில் இளவரசன் இவான் கண் விழித்தபோது ரொட்டி தயாராக மேசை மீது இருந்தது. அது நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

(தொடரும்...)

# உண்மை நட்பு



ரவியும் பாஸ்கரும் இணை பிரியா நண்பர்கள். படிப்பு முதல் விளையாட்டு வரை எல்லாவற்றிலும் சிறந்து விளங்குபவர்கள். அதனால், ஆசிரியர்கள் அவர்களைச் சுட்டிக்காட்டி மற்ற மாணவர்களுக்கு அறிவுரை வழங்குவார்கள். ஆசிரியர்கள் அவர்களைப் புகழ்ந்து பேசுவதைப் பிடிக்காத சில மாணவர்கள் அவர்களின் நட்பை எப்படியாவது பிரிக்கவேண்டும் என்று முடிவு செய்து அதற்கான சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்திருந்தனர். அந்த நேரமும் வந்தது.

ஒருநாள் சக மாணவன் ஒருவன் செய்த தவறை மறைத்து, அதைச் செய்தது ரவிதான் எனப் பொய் சாட்சி கூறி ஆசிரியரிடம் அவனை மாட்டிவிட்டனர். இப்படித் தங்களை செய்யச் சொன்னது பாஸ்கர்தான் என்று ரவியிடம் கூறி இருவருக்கும் இடையில் பிரிவினையை ஏற்படுத்தினர்.

பாஸ்கர் எவ்வளவோ எடுத்துக் கூறியும் ரவி அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. தூய்மையான நட்பில் களங்கமாக சந்தேகம் என்னும் கரும்புள்ளி விழுந்தது. தீய மாணவர்களின் துர்போதனையால் ரவி பாஸ்கரை தன் எதிரியாகவே கருதத் தொடங்கினான். வேதனையில் மூழ்கிய பாஸ்கர், எப்படியாவது தன் நண்பன் தன்னைப் புரிந்துகொள்ள வேண்டுமென்று தினமும் கடவுளை வேண்டினான்.

ஒருநாள் பாஸ்கர் தனது சைக்கிளில் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தான். அப்போது வழியில் ஒரு கூட்டம் நிற்பதைக் கண்டு என்ன விஷயம் என்று எட்டிப் பார்த்தான். அங்கே ஒருவர் விபத்தில் சிக்கி தலையில் அடிபட்டு ரத்தம் வழிந்த நிலையில் மயங்கிக் கிடந்ததைக் கண்ட பாஸ்கர் பதறிப் போனான் அருகே சென்று அவரின் முகத்தைப் பார்த்து மேலும் அதிர்ச்சியுற்றான். இவர் ரவியின் தந்தையாயிற்றே இயல்பாகவே பிறருக்கு உதவும் குணம் கொண்ட பாஸ்கர்,வேகமாகச் செயல்பட்டான். தன்னிடமிருந்த கைபேசியின் மூலம் உரியவர்களுக்குத் தகவல் கொடுத்தான். அருகில் இருந்த மருத்துவமனைக்கும் தகவல் கொடுத்து அம்பியூலன்ஸை வரவழைத்து ரவியின் தந்தையை மருத்துவமனையில் சேர்த்தான்.

அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், தலையில் அடிபட்டுக் குருதி அதிகம் வெளியேறியிருப்பதால் அவசரமாக அவருக்கு குருதி ஏற்ற வேண்டும் என்று கூறி பாஸ்கரை ஏற்பாடு செய்யச் சொன்னார்கள்.

அவரது குருதிப் பிரிவைக் கேட்ட பாஸ்கர், அவருடைய குருதியும் தன்னுடைய குருதிப் பிரிவும் ஒன்றுதான் என்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சியுடன் தானே அவருக்குத் தேவையான குருதியையும் கொடுக்க முன்வந்தான்.

இதற்கிடையே பாடசாலை சென்ற ரவிக்குத் தகவல் தெரிந்து மருத்துவமனைக்கு உடன் விரைந்தான். அங்கு அவன் கண்ட காட்சியில் அவன் உள்ளம் ஒருபுறம் வருத்தமும் மறுபுறம் நெகிழ்வும் அடைந்தது. ஒரு படுக்கையில் சுய நினைவிழந்த நிலையில் அவன் தந்தையும் மறுபடுக்கையில் பாஸ்கரும் படுத்திருந்தனர்.

மருத்துவரின் குரல் கேட்டுத் திரும்பினான் ரவி... ''ஏம்பா... இவர் உன் தந்தையா?''

''ஆமாம் ஐயா. மிக்க நன்றி. என் தந்தைக்கு சிகிச்சை அளித்துக் காப்பாற்றிவிட்டீர்கள். மீண்டும் நன்றி ஐயா'' என்றான் ரவி.

''அந்த நன்றியை அதோ படுத்திருக்கிறானே, அந்தப் பையனுக்குச் சொல். அவன்தான் தாமதிக்காமல் உன் தந்தையை இங்கு கொண்டு வந்து சேர்த்தது மட்டுமன்றி. சரியான நேரத்தில் தன் குருதியையும் கொடுத்தான். அதனால்தான் எங்களால் உன் தந்தையைச் சிரமமின்றிக் காப்பாற்ற முடிந்தது'' என மருத்துவர் கூறியதைக் கேட்ட ரவியின் கண்கள் கலங்கின. பாஸ்கரின் அருகே சென்ற ரவி, சற்று சோர்வாகப் படுத்திருந்த பாஸ்கரின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

கேட்பார் பேச்சைக் கேட்டு எவ்வளவோ உதாசீனப்படுத்தியும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் தன் தந்தையைக் காப்பாற்றிய பாஸ்கரை நினைத்துப் பெருமைப்பட்டான். அவனது நட்பின் தூய்மையைப் புரிந்து கொள்ளாத தன்னை நினைத்து வெட்கப்பட்டான். கண் விழித்த பாஸ்கரிடம் நன்றியுடன் தன் தவறை உணர்ந்தவனாக மன்னிப்புக் கேட்டபடி, கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்க ரவி, பாஸ்கரை அணைத்துக் கொண்டான். இனி அவர்களின் நட்பை யாராலும் பிரிக்க முடியாது என்பதையும் உணர்ந்து இருவரும் அகமகிழ்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2010 உலகக் கிண்ண

# கால்பந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளும் 32 அணிகள்




அடுத்த வருடம் (2010) ஜூன் 11 ஆம் திகதி தொடக்கம் ஜூலை 11 ஆம் திகதி வரை உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ளமை நாம் அறிந்ததே. மேற்படி, உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளில் 32 அணிகள் மட்டுமே கலந்து கொள்ளமுடியும். அதற்கமைய, 204 நாடுகள் குறித்த 32 இடங்களுக்கான தகுதிகாண் போட்டிகளில் கலந்து கொண்டன. இதன்படி, தகுதிகாண் சுற்றுக்கள் முடிவடைந்து உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்ளும் அணிகள் தீர்மானிக்கப் பட்டுள்ளன.

இதில் முக்கியமாக கவனிக்கத்தக்க அம்சம் என்னவென்றால், இம்முறை ரஷ்யா அணி உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகுதியை இழந்துள்ளமையாகும். முக்கியமான ஒரு போட்டியில் ஸ்லோவேனியாவிடம் தோல்வியுற்றதன் மூலம் ரஷ்யா உலகக் கிண்ண வாய்ப்பைத் தவறவிட்டமை குறிப்பிடத்தக்கது.

**2010 உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகுதியைப் பெற்றுள்ள அணிகள் வருமாறு;**

அவுஸ்திரேலியா, ஜப்பான், தென்கொரியா, வடகொரியா, அல்ஜீரியா, ஐவரிகோஸ்ட், நைஜீரியா, கெமரூன், கானா, தென்னாபிரிக்கா, டென்மார்க், பிரான்ஸ், கிறீஸ், நெதர்லாந்து, சேர்பியா, ஸ்லேவேனியா, சுவிட்ஸர்லாந்து, இங்கிலாந்து, ஜேர்மனி, இத்தாலி, போர்த்துக்கல், ஸ்லோவேக்கியா, ஸ்பெய்ன், அமெரிக்கா, மெக்ஸிகோ, நியூஸிலாந்து, ஆர்ஜன்டீனா, சிலி, உருகுவே, ஹொண்டுராஸ், பராகுவே, பிரேஸில்.

## செரினா முதலிடத்தில்

அண்மையில் வெளியிடப்பட்ட டென்னிஸ் தரப்படுத்தல் பட்டியலில் மகளிர் பிரிவில் அமெரிக்காவைச் சேர்ந்த செரினா வில்லியம்ஸ் முதலிடத்தைப் பெற்றுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவருக்கு அடுத்தபடியாக டினாரா சஃபினா இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளதுடன், மூன்றாவது இடத்தை வீனஸ் வில்லியம்ஸ் பெற்றுள்ளார். முதலிடத்தைப் பெற்றுள்ள



செரினா வில்லியம்ஸ் 7945 புள்ளிகளுடனேயே முதலாவது இடத்தைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆர்ஜன்டீனாவின் பின்னடைவு

ஆர்ஜன்டீனா கால்பந்தாட்ட அணி அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகுதியை கடைசிச் சந்தர்ப்பத்திலேயே பெற்றது. அதன்படி, ஆர்ஜன்டீனா அணியின்மீது கால்பந்தாட்ட விமர்சகர்கள் நல் அபிப்பிராயத்தைக் கொள்ளவில்லை என்றும் கருதப்படுகின்றது.



ஆர்ஜன்டீனா அணி உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு தகுதி பெறாது என்றே அநேகரும் கருதியிருந்தனர். எனினும், ஆர்ஜன்டீனா அணியின் பயிற்றுனரான முன்னாள் வீரர் மெரடோனா தெரிவித்துள்ள கருத்தின்படி, இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் தனது அணி திருப்பமொன்றை ஏற்படுத்த ஆயத்தமாகியிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## டெஸ்ட் தரப்பட்டியல்



**இந்திய அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டிகளில் இரட்டைச் சதம் அடித்த இலங்கை அணி வீரர் மஹேல ஜயவர்தன ஐ.சி.சி டெஸ்ட் தரப்படுத்தல் பட்டியலில் முதலாம் இடத்தை அடைந்துள்ளார்.**

**இந்திய அணியுடனான போட்டியில் 275 ஓட்டங்களைப் பெற்ற மஹேல குறித்த இரட்டைச் சதத்தின் மூலம் இதுவரை ஆறு தடவைகள் இரட்டைச் சதத்தைப் பெற்ற வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.**

**ஐ.சி.சி யின் டெஸ்ட் தரப்பட்டியல் வருமாறு;**

| இடம் | பெயர் | நாடு | புள்ளி |
|---|---|---|---|
| 01 | மஹேல ஜயவர்தன | இலங்கை | 883 |
| 02 | சங்கக்கார | இலங்கை | 846 |
| 03 | காம்பீர் | இந்தியா | 839 |
| 04 | சந்தர்போல் | மே.இ.தீவுகள் | 821 |
| 05 | மொஹம்மட் யூசுப் | பாகிஸ்தான் | 818 |
| 06 | கிளார்க் | அவுஸ்திரேலியா | 808 |
| 07 | யூனுஸ்கான் | பாகிஸ்தான் | 801 |
| 08 | ஸ்மித் | அவுஸ்திரேலியா | 782 |
| 09 | பொன்டிங் | அவுஸ்திரேலியா | 779 |
| 10 | கெலிஸ் | தெ.ஆபிரிக்கா | 755 |

## கால்பந்தாட்டத்தில் கைப்பந்தாட்டம்

உலகக் கிண்ண கால்பந்தாட்ட தகுதிகாண் போட்டியொன்றில் பிரான்ஸ்-அயர்லாந்து அணிகளுக்கிடையிலான போட்டியின்போது, பிரான்ஸ் அணியின் தலைவர் தியரி ஹென்றி நகர்த்திச் சென்ற பந்தை பெற்றுக் கொண்ட சகவீரர் வில்லியம் அந்தப் பந்தை கோல் போட்டுவிட்டார். இதன் காரணமாக உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகுதியை பிரான்ஸ் பெற்றது.

ஆனால், பிரான்ஸ் பெற்ற கோள் பெரும் சர்ச்சையையே கிளப்பிவிட்டது. அதாவது, பிரான்ஸ் அணித் தலைவர் ஹென்றி குறித்த பந்தினை நகர்த்திக் கொண்டு வருகையில் பந்தானது அவரது கையில் பட்டுவிட்டது. ஆனால், நடுவர் அதனைக் கவனிக்கவில்லை. இதுவே பிரான்ஸ் உலகக் கிண்ணத் தேர்வு அணிகளில் ஒன்றாக நுழைவதற்கு வாய்ப்பாகவும் அமைந்துவிட்டது. எனவே, குறித்த போட்டியை மீண்டும் நடத்துமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதிலும் ஏற்பாட்டாளர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டனர்.



இதேவேளை, ஹென்றி தனது தவறை ஒப்புக்கொண்டுள்ளமையும் அதற்கு வருத்தம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொ/இந்துக் கல்லூரி ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கலைவிழா




கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கலைவிழா பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றபோது, மாணவர்கள் வழங்கிய கலை நிகழ்வுகளையே படங்களில் காண்கிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழுள்ள சிறப்பியல்புகளைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்துக்களை பொருத்தமான விலங்குகளுக்கு அருகில் எழுதுக.

**1**

A - அதிக ஞாபகசக்தியினை உடையது.
B - பாலைவனக் கப்பல்.
C - காலைப்பிடித்துத் தூக்கினால் இறந்து விடும்.
D - அதிக காலம் உயிர் வாழக்கூடியது.
E - தந்திரம் மிக்கது.
F - மரம் விட்டு மரம் தாவிச் செல்லும்.



**சரியான விடையில் வட்டமிடுக** **2**

1. LXIX - 71, 509, 69
2. D - 500, 50, 100
3. CMX - 809, 1010, 910
4. XIV - 14, 104, 16
5. LXVIII - 68, 508, 97





**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.12.08 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 237
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

**5** ஒரே மாதிரியான உருக்களில் X அடையாளமிடுங்கள்



## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 234 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
அஷ்பாக் ஜாவித்,
தரம் - 6$^{A}$, அல்-மனார் ம.கல்.,
கல்முனை.

**போட்டி: 02**
எம்.விதுக்ஷினி,
தரம் -3, பட்டாவத்த த.வித்.,
பதுளை.

**போட்டி: 03**
ஆர்.ரஞ்சனி தேவி,
தரம் - 8, நாமகள் த.வித்.,
நாவுல.

**போட்டி: 04**
அஸீஸா அக்பர்,
தரம் - 10, சென் மேரிஸ் கல்.,
திருகோணமலை.

**போட்டி: 05**
எஃப்.டில்ஷானா,
தரம் - 4$^{T}$,
புனித அந்தோனியார் கல்.,
கண்டி.

## குழம்பியுள்ள பழமொழிகளை ஒழுங்குபடுத்தி எழுதுக

**3**

- அன்னம் இட்டவர் வீட்டில்
- புள்ளிக்கு உதவாது
- கிட்டாதாயின்
- சொல்லியுஞ் செய்யார் கசடர்
- பள்ளிக் கணக்கு
- கன்னம் இடலாமா?
- சொல்லாமற் செய்வார் நல்லோர்
- வெட்டென மற

1. ........................................
2. ........................................
3. ........................................
4. ........................................

## அறிவுக்கு விருந்து 234 விடைகள்

**போட்டி: 03**
- பாகிஸ்தான் (3 ஆவது படம்)

**போட்டி: 04**





**போட்டி: 05**
1) 236 - CCXXXVI
2) 49 - XLIX
3) 507 - DVII
4) 33 - XXXIII
5) 84 - LXXXIV

### பாராட்டுப் பெறுவோர்

- எம்.ஹம்னீ, தரம் - 6$^{E}$, பதுரியா ம.கல்., மாவனல்லை.
- எஃப்.ஃபாலினா, தரம்-10, பெண்கள் அரபுக் கல்., ஓட்டமாவடி-03.
- ஏ.வைதேவி, ஹபுகஸ்தலாவ.
- எஸ்.கோகுலன், தரம்-8$^{B}$, ரஜவல்ல இ.தே.பாட., திகன.
- எம்.ரிம்ஸாத், அல்-அக்ஸா வித்., கிண்ணியா.
- ஏ.பாதில், பொருபனை, ரத்மலானை.
- கி.அட்சரா, தரம்-3, களுதாவளை ம.வித்., களுதாவளை.
- என்.முஹம்மத், தரம்-6, அல்-ஹம்றா ம.வித்., தர்கா நகர்.
- ஆர்.ஷஹாமா, தரம்-3, அஷ்-ஹம்ஸ் ம.வித்., கெலிஓயா.
- வி.திசானி, கோட்டைக்கல்லாறு-02.

## வழி காட்டுங்கள்

**4**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ''போகன்வில்லா''.... ஒரு மலர் மட்டுமல்ல...

போகன்வில்லா என்றால் ஒரு மலர் என்றுதான் நம்மில் அநேகருக்குத் தெரியும். ஆனால், போகன்வில்லாவைப் பற்றி ஆராய்ந்தால் அதன் தகவல்கள் நீண்டு செல்கின்றன.



உஷ்ண சீதோஷ்ண பகுதிகளில் வளரும் ஓர் அலங்கார மலரே போகன்வில்லா. இது இலங்கை, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, பாகிஸ்தான், இந்தியா, தாய்வான், வியட்னாம், மலேசியா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், மெக்சிக்கோ, தென் ஆபிரிக்கா, குவைத், அமெரிக்கா போன்ற பல நாடுகளிலும் மிகவும் பிரபல்யம் பெற்றுள்ளது. இலகுவாக வளர்க்கக்கூடிய இந்த போகன்வில்லாவுக்கு அதிகளவு நீர் தேவைப்படுவதில்லை.

போகன்வில்லா ஒரு மலர் மட்டுமல்ல; பிரான்ஸிய கடற்படை அதிகாரி ஒருவரின் பெயரும் அதுதான். லூயிஸ் அன்டனி டி போகன்வில்லா என்னும் இந்தக் கடற்படை அதிகாரி கடற்பயணமொன்றின்போது 1768 ஆம் ஆண்டு பிரேசிலில் இந்த மலரைக் கண்டுபிடித்தார். அதனையடுத்தே போகன்வில்லா என்னும் அவரின் பெயர் அந்த மலருக்கு சூட்டப்பட்டது.



1729 ஆம் ஆண்டு பாரிஸில் பிறந்த இவர் 1753 இல் கடற்படையில் சேர்ந்தார். 1756 இல் கடற்படை அதிகாரியான இவர் பல துணிச்சல் மிக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு 1758 இல் ஒரு வெற்றிகர முறியடிப்புப் போரில் பெருங்காயங்களுக்கும் உள்ளானார். 1766 இல் உலகைச் சுற்றிவரும் அனுமதியைப் பெற்றார். மேற்கத்தைய வரலாற்றில் இவரே 14 ஆவது மாலுமியும் உலகைச் சுற்றிவந்த முதல் பிரான்ஸியரும் ஆவார். பல உயர் பதவிகளை வகித்த அவர் 1811 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 31 இல் காலமானார்.அவருக்கு மூன்று புதல்வர்கள் இருந்தனர். மூவருமே பிரான்ஸ் ராணுவத்திலும் கடற்படையிலும் சேவைபுரிந்தனர்.

போகன்வில்லா என்னும் பெயர் அவர் கண்டுபிடித்த மலருக்கு மட்டுமன்றி மிகப்பெரிய தீவுகளான சாலமன் தீவுகளுக்கும் சூட்டப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல; பிரான்ஸிய கடற்படையைச் சேர்ந்த பதின்மூன்று கப்பல்களுக்கும் அவரைக் கௌரவிக்கும் வகையில் போகன்வில்லா என்னும் பெயர் சூட்டப்பட்டுள்ளன. அந்தவகையில், இன்னும் பல்வேறு பொருட்களுக்கும் இடங்களுக்கும் போகன்வில்லா என்னும் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

# 'சேண்ட்விச்' பிறந்த கதை

இரண்டு பாண் துண்டுகளுக்கு இடையே சமைத்த காய்கறி அல்லது இறைச்சி, மீன் வைத்துத் தயாரிக்கப்படும் 'சேண்ட்விச்' இப்பொழுது உலகெங்கும் பிரபலமான உணவு. இந்த 'சேண்ட்விச்' முதன்முதலாக எப்படிப் பிறந்தது தெரியுமா?

18 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஜோன் மென்டேக் என்னும் அரச பரம்பரையைச் சேர்ந்த ஒருவர் இருந்தார், அவர் சீட்டு விளையாடுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். சாப்பாட்டுக்குக்கூட சீட்டு ஆடுவதை நிறுத்த மாட்டார். அப்போது அவர் தன் ஊழியரிடம் இரண்டு பாண் துண்டுகளுக்கு இடையில் சமைத்த இறைச்சியை வைத்துக் கொண்டு வந்து தருமாறு கூறுவது வழக்கம்.






அதன்மூலம் அவர் சீட்டாட்டத்தை நிறுத்தாமல் விளையாட்டைத் தொடர முடிந்தது. இதனையடுத்து இவரைப் போன்று ஏனையவர்களும் ஜோன் மென்டேர்சின் ஊர்ப்பெயரைக் குறிப்பிட்டு சேண்ட்விச்சைப் போல் தங்களுக்கும் வேண்டும் என உணவகங்களில் கேட்டனர். இதனையடுத்தே சேண்ட்விச் பிரபலமானது. தற்பொழுது சேண்ட்விச் உலகம் முழுவதும் பிரபலமாகி உள்ளது.



# மிகப்பெரிய நீர்வாழ் உயிரினக் காட்சியகம்

உலகின் மிகப்பெரிய நீர்வாழ் உயிரினக் காட்சியகம் அமெரிக்க மாநிலமான ஜியோர்ஜியாவின் தலைநகர் அட்லாண்டாவில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு சுமார் 500 வகைகளைச் சேர்ந்த ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட நீர்வாழ் உயிரினங்கள் உள்ளன. இவற்றுள் நான்கு திமிங்கில சுறாக்களும் (Whale Sharks) மூன்று பெலுகா திமிங்கிலங்களும் (Beluge Whales) அடங்கும். இந்தக் காட்சியகம் 20 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.





இங்குள்ள நீர்வாழ் உயிரினங்கள் ஐந்து வெவ்வேறு பகுதிகளில் கட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இடப்பக்கமாக நுழையும்போது சிறுவர்களுக்கான தொடுகை தாங்கிகள் உள்ளன. இங்கு கடல் ஆமை போன்ற உயிரினங்களை சிறுவர்கள் தொட்டுப்பார்க்கக் கூடியதாக உள்ளது. அடுத்து ஆறு போன்று அமைக்கப்பட்டுள்ள பகுதியில் உல்லாசப் பயணிகள் வட அமெரிக்க மீன் இனங்களைக் கண்டு ரசிக்கலாம். இவற்றோடு பிரன்ஹா, மின்சார மீன் என்பனவற்றையும் காணலாம். மற்றொரு பகுதியில் துருவப் பகுதியைச் சேர்ந்த விலங்குகளைக் காணலாம். மற்றும் கெலிஃபோர்னியா கடல் சிங்கங்கள், ஜப்பானிய சிலந்தி நண்டுகள், ஆபிரிக்க கறுப்புக்கால் பெண்குவின்கள் என்பன உட்பட கடல் வாழ் விலங்குகள் பல இங்குள்ளன.


## விஜய் சந்தா விபரம்

| கொழும்பில் வசிப்போர் (நேரடியாகப் பெறுவதற்கு) | | கொழும்பிற்கு வெளியே வசிப்போர் (தபாலில் பெறுவதற்கு) | |
|---|---|---|---|
| 6 மாதத்திற்கு | - ரூபா 390/= | 6 மாதத்திற்கு | - ரூபா 780/= |
| 1 வருடத்திற்கு | - ரூபா 780/= | 1 வருடத்திற்கு | - ரூபா 1560/= |

கீழ்காணும் கூப்பனை நிரப்புங்கள். (ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது.)

பெயர் - ..............................
..............................
முகவரி - ..............................
..............................
தொ.பேசி - ..............................
பத்திரிகையின் பெயர் - ..............................


விஜய் Subscription
For 6 Months/ 1 Year
(அவசியமற்றதை வெட்டிவிடவும்)
..............................
கையொப்பம்/திகதி

மேற் காணப்படும் விபரத்திற்கேற்ப பணத்தை தபாலகத்தில் காசுக்கட்டளையாகச் செலுத்தி குறித்த காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் கந்தோர் - Slave Island Post Office என்று குறிப்பிடவும். குறித்த காசுக்கட்டளையையும் இங்கு நிரப்பப்பட்ட கூப்பனையும் ஒன்றாக இணைத்து பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி:
**SUBSCRIPTION MANAGER,**
**Wijeya Newspapers Ltd.,**
**8, Hunupitiya Cross Road, Colombo-02**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைப்பேசியை அறிமுகப்படுத்தியவரே அதற்காக கவலைப்படுகின்றார்



கைத்தொலைபேசியை அறிமுகப்படுத்திய மார்ட்டின் கூப்பர் அவர்கள், இவ்வாறான கைத்தொலைபேசியை அறிமுகப்படுத்தியதையிட்டு தாம் தற்போது கவலைப்படுவதாக தெரிவித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதாவது, ஒருவர் இன்னொருவருடன் எந்த இடத்திலிருந்தும் உரையாடுவதற்காகவே கைத்தொலைபேசி அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், நாளடைவில் இன்றைய பாவனையிலுள்ள கைத்தொலைபேசிகளில் – கெமரா, ஜீ.பி.ஆர்.எஸ், வானொலி என பல்வேறு அம்சங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இதனை iPhone அல்லது Smart Phone என்றும் குறிப்பிடலாம். இவ்வாறான நவீனரக ‘ஸ்மார்ட் ஃபோன்’கள் பாவனையாளர்களை பரபரப்படையச் செய்வதாகவும் இது ஒருவித களைப்பையும் உளவியல் ரீதியிலான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிடுகின்ற 80 வயதுடைய கூப்பர், கைத்தொலைபேசியில் டிஜிட்டல் கெமரா, MP3 பிளேயர் போன்ற மேலதிக பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளதையிட்டு தனது கடும் அதிருப்தியை தெரிவிக்கின்றார்.

**கெமரா, வானொலி, ஜீ.பி.ஆர்.எஸ் என வசதிகள் இருப்பது உளவியல் தாக்கத்தையே ஏற்படுத்துகின்றதாம்**



இருவருக்கிடையே தெளிவான சீரான உரையாடலை மேற்கொள்ளக்கூடிய வகையிலான கைத்தொலைபேசிகளையேதான் நல்லதொரு கைத்தொலைபேசியாக கருதுவதாகவும் மாறாக, மேலதிக வசதிகள் எனும் பெயரில் நவீனமயப்படுத்தப்பட்ட கைப்பேசியை ஒரு தொந்தரவாகவே தான் கருதுவதாகவும், இவ்வாறான நவீன வசதிகளைக் கொண்ட கைப்பேசிகளினால் எந்தவொரு விடயத்தையும் சீராக, முறையாக செய்துகொள்ள முடிவதில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday December 02, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org